1-15 மார்ச் 1999 ரூ. 4.00
www.padippakam.com

ஜெயா ஊழல் வழக்கு: திருடனே நீதிபதி

# புதிய ஜனநாயகம்



## ''ரேஷன் கடைகளை மூடு'' உலக வங்கி உத்தரவுக்கு குரங்காக ஆடும் பா.ஜ.க.

www.padippakam.com

# பா.ம.க.: சமூக விரோதிகளின் கூடாரமா?

## பென்னாகரம் பகுதியில் பா.ம.க ஆதரவுடன் ஆட்டம் போட்டு வந்த ரவுடிக் கும்பலின் கொட்டம், வி.வி.மு.வின் போராட்டத்தால் ஒடுங்கியது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் நகரம் அருகே உள்ள கிராமம் கூத்தபாடி. இக்கிராமத்திலுள்ள ஆசிரியர் முனியப்பன் பாட்டாளி மக்கள் கட்சியில் உள்ளார். இக்கிராமத்திலுள்ள பெரும்பாலோர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், பைனான்சு என்ற பெயரில் கந்து வட்டித் தொழிலும் செய்து வருகின்றனர். இந்த இரண்டு தொழிலுக்குமே ரௌடிக் கும்பல் மிக அவசியம். எனவே கூத்தப்பாடியிலுள்ள வேலையற்ற இளைஞர்களை ரௌடிக் கும்பலாக வளர்த்து, அவர்களுக்குத் தலைமை தாங்குவது ஆசிரியர் முனியப்பனும், 'பைனான்சு' முருகேசன் என்பவருமாவர்.

உள்ளூர் போலீசு உதவியும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இத்தொகுதி எம்.எல்.ஏ. ஜி.கே. மணியின் உறுதுணையும் இருக்கும்போது இந்த கந்து வட்டி - கள்ளச் சாராய - ரௌடிக் கும்பல்களின் கொட்டத்துக்கு கேட்கவா வேண்டும். இவர்கள் ஆயுதங்களுடன் 'டெம்போ' வேனில் கும்பலாக வருவதும், அப்பாவிகளை அடித்து நொறுக்குவதும் என ரௌடி ராஜ்ஜியமே நடத்திக் கொண்டுள்ளனர்.

பென்னாகரத்தில் உள்ள ஏ.ஆர். மணியின் 'ராம் பாலாஜி' திரையரங்கில் இவர்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு அளவே கிடையாது. இந்த ரவுடி கும்பல் நுழைவுச் சீட்டு இல்லாமல் நுழைவதும், உள்ளே விட மறுக்கும் தொழிலாளியை அடிப்பதும் என அராஜகத்தை அரங்கேற்றி வந்தனர். பிரச்சினை சிக்கலாகும் போது ஆசிரியர் முனியப்பனும், 'பைனான்சு' முருகேசனும் வந்து பஞ்சாயத்துப் பேசி அழைத்துச் செல்வார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் கடந்த 17.1.'99 அன்று மதியம் கூத்தப்பாடியைச் சேர்ந்த ஒருவன் நுழைவுச் சீட்டு வாங்காமல் உள்ளே நுழைய முயன்று, வேலை செய்பவர்களுக்கும் அவனுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. தனியாளாக வந்த கூத்தப்பாடிக்காரன் ஓடிவிட்டான். அவன் போய் ஊரில் சொல்ல, 25 பேர் கொண்ட ரவுடி கும்பல் தடிகள், கத்திகளுடன் இரவு 10 மணிக்கு திரையரங்கினுள் நுழைந்து, வேலை செய்பவர்களைக் கொலை வெறியுடன் தாக்கி, அடித்து நொறுக்கினர். முனியப்பன், முருகன், ராஜேந்திரன், முனுசாமி, அப்துல் மஜீத், வடிவழகன், கோவிந்து, பழனியம்மாள் ஆகியோர் அடிபட்டனர். திரையரங்க கண்ணாடிகள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன.

திரையரங்கில் வேலை செய்யும் கள்ளிபுரத்து ஆட்களை ரவுடிக் கும்பல் தாக்குகிறது என்ற செய்தி தெரிந்த உடன், கள்ளிபுரம் (கிழக்கு, மேற்கு) கிராம மக்கள் 500 பேருக்கு மேல் திரண்டு திரையரங்கை நெருங்கவே, ரவுடிக் கும்பல் ஓடிவிட்டது. இந்த ரௌடிகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் பெருகி வருவதால், கூடியிருந்த மக்கள் அனைவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் தலைமையில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளரிடம் முறையிட்டனர். அவர் வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறவே மக்கள் திரும்பி விட்டனர்.

அன்று இரவே ரவுடி கும்பலைச் சேர்ந்த ஒருவனை போலீசார் கைது செய்து சிறையிலடைத்தனர். இதைப் பற்றி கேள்விப்பட்ட பா.ம.க. எம்.எல்.ஏ. ஜி.கே. மணி ஒரு பெரிய கும்பலுடன் காவல் நிலையம் சென்று துணைக் கண்காணிப்பாளரிடம், கைது செய்தவனை வெளியே விடும்படி கேட்டுள்ளார். அதிகாரி விட மறுக்கவே, அவரது சட்டையயை கொத்தாகப் பிடித்து இழுத்துள்ளார். இரண்டு வேன்களில் ஆயுத போலீசார் அந்த நேரம் வந்திறங்கவே, மணியும் அவரது ரவுடி கும்பலும் கலைந்து சென்றனர்.


எம்.எல்.ஏ. மணியும் களத்திலிருந்து வழிகாட்டவே மேலும் உற்சாகமடைந்த கூத்தப்பாடி ரௌடி கும்பல் சாதி வெறியைத் தூண்டும் வகையிலும் சாதி மோதலை உருவாக்கும் வகையிலும் கள்ளிபுரத்தில் உள்ள ஒரு வீட்டுக்குத் தீ வைத்துவிட்டு ஓடிவிட்டனர். ஆசிரியர் முனியப்பனின் ரௌடி கும்பலையும், எம்.எல்.ஏ. ஜி.கே. மணியையும் அம்பலப்படுத்தி வி.வி.மு. தோழர்கள் பென்னாகரம், தருமபுரி பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டினர்.

இதன்பின் பா.ம.க.வினர் வி.வி.மு. தோழர்களை சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர். மாவட்ட ஆட்சியர், தமது முன்னிலையில் சமாதானப் பேச்சுக்கு வி.வி.மு.வினரை அழைக்கவே வி.வி.மு. தோழர்களும் கள்ளிபுரம் மக்களும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். கூத்தப்பாடியிலிருந்து கட்சிக்கு ஒருவர் என 7 பேர் கலந்து கொண்டனர். இனி கூத்தப்பாடி ஆட்கள் யாரும் ரௌடித்தனம் செய்ய மாட்டார்கள் என உறுதி கூறி, வழக்கிலுள்ள நபர்களை தாங்களே போலீசில் ஒப்படைப்பதாகவும் உறுதி கூறினர். கள்ளிபுரம் மக்களும், இனிமேலும் இதுபோல் நடந்தால் பொறுமையாக இருக்க மாட்டோம் என்று மாவட்ட ஆட்சியரிடம் கூறினர். அதன்பின் சட்டப்படி ரௌடிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வேறு பிரச்சினை ஏதும் செய்யாமல் சமாதானமாகப் போவது என்றும் முடிவானது.

கள்ளச் சாராயம் - கந்துவட்டி - ரௌடி கும்பல்களை அம்பலப்படுத்தி முறியடிக்க நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளால் மட்டும்தான் முடியும் என்பதை ரௌடிகளுக்கு எதிரான இந்தப் போராட்டம் உணர்த்துகிறது.

தகவல்:
வி.வி.மு.,
பென்னாகரம்.

கூத்தப்பாடி ரவுடி கும்பலால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட வீடு





படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு*

தொகுதி: 14

இதழ்: 7 - 8

16 பிப்.'99 - 15 மார்ச்'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18


படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# வாஜ்பாய் - நவாஸ் செரீப் சந்திப்பு: உள்நாட்டில் தேசிய வெறியூட்டி ஆதாயம் உலக அரங்கில் நட்புறவு மாய்மாலம்

அரை நூற்றாண்டு காலமாக பகைமை பாராட்டி போர் தொடுத்தும், அணுகுண்டு வெடித்து அச்சுறுத்தியும், முஸ்லிம்களைப் பாகிஸ்தானின் கைக்கூலிகள் என்று அவதூறு செய்து ஒடுக்கியும், கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் கூட பாக். அணி வெற்றி பெறுவதை எதிர்த்துக் கலவரம் செய்யுமளவுக்கு குறுகிய தேசிய வெறியூட்டியும் வரும் இந்திய அரசின் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தானுடன் நட்புறவு கொள்ளத் துடிப்பதாகக் கூறுவதை வடிகட்டிய முட்டாள்கூட நம்ப மாட்டான்.

ஆனால், ''அவர் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது பூகோள பாடத்தைப் படிக்க நண்பர் வீட்டுக்குப் பேருந்தில் சென்றார்; இப்போது பிரதமரானதும் வரலாற்றை உரு வாக்க நட்பு நாட்டுக்கு பேருந்தில் செல்கிறார்'' என்று நாளேடுகளில் முழுப் பக்க விளம்பரங்கள், தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்பு என சர்வகட்சி ஆதரவுடன், பிரதமர் வாஜ்பாய் நடத்திய லாகூர் பேருந்து நட்புறவுப் பயணத்தைப் பாராட்டி 'தேசிய'ப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன. வாஜ்பாயின் முயற்சியால் இந்தியாவுக் கும் பாகிஸ்தானுக்குமிடையே உறுதியான நட்புறவுப் பாலம் நிறுவப்பட்டுள்ளதாகவும், இது மகத்தான வரலாற்றுச் சாதனை என்றும் ஆர்ப்பரிக்கின்றன.

கீறல் விழுந்த இசைத்தட்டு ஒலிப்பதைப் போல, இருநாடுகளின் முந்தைய பிரதமர் கள் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் பாணியிலேயே, அமைச்சக மட்டத்தில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த பேச்சு வார்த்தை, எல்லையில் பதற்றத்தைத் தணிப்பது, காஷ்மீர் பிரச்சினையை பேசித் தீர்ப்பது, இரு நாடுகளின் பொருளாதார - வர்த்தக உறவுகளை மேம்படுத்து வது என்பதைத் தவிர, வாஜ்பாயும் நவாஸ் செரீபும் கையெழுத்திட் டுள்ள லாகூர் பிரகடனத்தில் நட்புற வுக்கான குறிப்பிடத்தக்க அம்சம் என்று எதுவும் கிடையாது.



மேற்கொண்டு அணு ஆயுதச் சோதனைகள் நடத்துவதில்லை; அணு ஆயுதப் போர் வெடித்தால் ஒருவருக்கொருவர் முன்னெச்ச ரிக்கை தகவல் தரும் ஏற்பாடு என இப்பிரகடனத்தில் உள்ள அம்சங் கள், அணுகுண்டு வெடிப்பால் உலக அரங்கில் தனிமைப்பட்டுள்ள இரு நாடுகளும் அதிலிருந்து மீள்வதற்காகச் செய்யும் பித்தலாட்டமே அன்றி உள்ளார்ந்த நட்புறவு எது வும் கிடையாது. இருப்பினும் இதையே நட்புறவு - சமாதானத்தின் தொடக்கம், வரலாற் றுச் சாதனை, நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்ய வேண்டும், இதேபோல் இலங்கைக்குப் படகுப் பயணம் செய்து அங்கு ஈழத் தமிழரின் துயர் துடைக்க வாஜ்பாய் முன்வர வேண்டும் என்று துதிபாடிகளும், பிழைப்புவாதிகளும், இந்துவெறியர்களும் கோயபல்சு பாணியில் பிரச்சாரம் செய்கின்றனர்.

அணுகுண்டு வெடிப்பு, பாதிரியார் எரிப்பு, தேவாலய இடிப்புகளால் உலக அரங்கி லும், விலையேற்றம் - கட்டண உயர்வு, ரேஷன் கடை மானியக் குறைப்புகளால் உள்நாட்டிலும் பா.ஜ.க. அரசு மக்களிடமிருந்து தனிமைப்பட்டுக் கிடக்கிறது. போதாக் குறைக்கு கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தங்கள் - கழுத்தறுப்புகளால் 'திறமையான' பிரதமரின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. எனவே, ஆரவாரமான பாக். பேருந்து நட்புறவுப் பயணம் மூலம் நாட்டு நலனில் அக்கறை கொண்டவர், அண்டை நாடுகளுடன் நட்புறவையும் சமாதானத்தையும் நேசிப்பவர் என்று ஒளிவட்டம் போட்டு செல்வாக்கை உயர்த்திக் கொள்வது, உலக அரங்கில் தனிமைப்படாதிருக்க இத்தகைய நட்புறவு நடவ டிக்கைகள் அவசியம் என எதிர்க்கட்சிகளைத் தாக்குதலிலிருந்து திசை திருப்பி, வாய் டைக்கச் செய்வது, மக்களிடம் பிரமையூட்டி அரசியல் ஆதாயம் தேடுவது என்ற நோக் கத்தோடுதான் பிரதமர் வாஜ்பாய் இத்தகைய மோசடி நாடகத்தை நடத்தியுள்ளார்.

அதேபோல பாகிஸ்தானில் தீவிரமாகிவிட்ட உள்நாட்டு நெருக்கடி, அணுகுண்டு வெடிப்பினால் உலக அரங்கில் தனிமைப்பட்டிருப்பது ஆகியவற்றிலிருந்து மீள அந் நாட்டு பிரதமர் நவாஸ் செரீபுக்கும் இத்தகைய வஞ்சக நாடகங்கள் அவசியமாக உள்ளன. பகைமை மறைந்தது; நட்புறவு மலர்ந்தது என்ற கூச்சலுக்குப் பின்னே, இருதரப்புமே அமெரிக்காவின் கட்டளைப்படி எஞ்சிய சுயாதிபத்திய உரிமையையும் இழந்து, அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தத்தில் (CTBT) கையெழுத்திடுவதற்கான முன்னேற்பா டுதான் இது.

அணு ஆயுத அழிப்பு ஒப்பந்தமோ, போர் மறுப்பு ஒப்பந்தமோ, காஷ்மீர் பிரச்சி னைக்குத் தீர்வுகாணும் திட்டமோ, அண்டை நாடுகளுடன் தீராத பகைமையை வளர்க்கும் தேசிய வெறிபிடித்த வெளியுறவுக் கொள்கையை ரத்து செய்யவோ முன் வராமல், இரு

www.padippakam.com

நாட்டுப் பிரதமர்களும் நட்புறவு - சமாதானத்தைச் சாதிக்கத் துடிக்கிறார்கள் என்றால், அது கேழ்வரகில் நெய்வடிந்த கதைதான்!

இங்கே, கல்கத்தாவில் இந்திய - பாக். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் தோல்வியை ஏற்க மறுத்து ரவுடித்தனம்; அங்கே, லாகூரிலும் கராச்சியிலும் வாஜ்பாய் வருகையை எதிர்த்து இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளின் கலவரம்; காஷ்மீரில் படுகொலைகள் எனத் தேசிய வெறியும் பகைமையும் தாண்டவமாடுகிறது. இவற்றை நீண்ட காலமாக அணையாமல் விசிறிவிட்டு வளர்த்தவர்கள், இப்போது நட்புறவு நாடகமாடுகின்றனர். உள்நாட்டிலே அண்டை நாட்டுக்கு எதிராகப் பகைமையையும் தேசிய வெறியையும் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம்; உலக அரங்கிலே நட்புறவு மாய்மாலம் என்பதுதான் இருநாட்டு ஆட்சியாளர்களின் புதிய உத்தியாக உள்ளது.



**அண்டை நாடுகளுடன் தீராத பகைமையை வளர்க்கும் அரசியலைக் கைவிடாமல், இரு நாட்டுப் பிரதமர்களும் நட்புறவு - சமாதானத்தைச் சாதிக்கத் துடிக்கிறார்கள் என்றால், அது கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான்!**

இம்மோசடிகளை அம்பலப்படுத்தி, ''அணு ஆயுதச் சோதனை உட்பட எந்தவொரு ஆயுதக்குவிப்பிலும் ஆக்கிரமிப்பிலும் ஈடுபட மாட்டோம் என்று போர் மறுப்பு ஒப்பந்தம் செய்! அண்டை நாடுகளுடன் பகைமை வளர்க்கும் ஆக்கிரமிப்பு வெறி கொண்ட இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை ரத்து செய்! அண்டை நாடுகளுடன் பகைமை பாராட்டி குறுகிய தேசிய வெறியூட்டி வரும் கட்சிகள், அமைப்புகள், மத நிறுவனங்களைத் தடை செய்! காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய, பாக். படைகளை முற்றாக வெளியேற்றி, அம்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!'' — ஆகிய அம்சங்களைக் கொண்ட ஒப்பந்தங்களும் இருதரப்பு உறவுகளும் மட்டுமே, இருநாடுகளின் நட்புறவுக்கும், சகோதர - சமாதான உறவுகளுக்கும் துவக்கப் புள்ளியாக இருக்க முடியும். நட்புறவு நாடகமாடும் தேசிய வெறி - போர் வெறி பிடித்த இரு நாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தி முறியடிப்பதே அதற்கான முன்தேவையாகும்.

# ஜெயா ஊழல் வழக்கு: திருடனே நீதிபதி

தன் மீதான ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்க ஜெ. முன் வைக்கும் இரு கோரிக்கைகள்: ஒன்று, தி.மு.க. ஆட்சியைக் கலை; மற்றொன்று, தனி நீதிமன்ற விசாரணை செல்லாது. இன்று உடனடியாக தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட முடியாது என்பதால், மைய அரசு தனி நீதிமன்றங்களில் உள்ள ஜெ. ஊழல் வழக்குகளை மாவட்ட நீதிமன்றங்களுக்கு ஒதுக்கி உத்தரவை வெளியிட்டுள்ளது.

'சிறப்பு நீதிபதிகள் நியமிப்பது மைய அரசு உரிமை; அதை மாநில அரசு எடுத்துக் கொண்டது முறைகேடு; இதைச் சரி செய்யவே இந்த நிர்வாக நடவடிக்கை' என பா.ஜ.க. கூட்டணி அரசு நியாயப்படுத்துகிறது. இந்நடவடிக்கை மூலம் ஊழலுக்குத் துணை போகிறது மைய அரசு என தமிழக முதல்வர் குற்றம் சாட்டுகிறார். தனி நீதிமன்றம் அமைத்தது செல்லும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து, இதுபற்றி உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூற உள்ள நேரத்தில், மைய அரசின் உத்தரவு தவறு, நீதிமன்ற அவமதிப்பு என சில சட்ட வல்லுனர்கள் கருதுகின்றனர்.

இந்த உத்தரவை தமிழக அரசுக்கோ, உயர் நீதிமன்றத்துக்கோ மைய அரசு அனுப்பும் முன்பே, அ.தி.மு.க. கட்சி அலுவலகத்தில் இருந்து இந்த உத்தரவு பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டது; இதிலிருந்தே இந்த உத்தரவு எதற்காக வெளியிடப் பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டு விடலாம். தனி நீதிமன்ற விசாரணையை உடனே நிறுத்து என ஜெயாவின் வழக்குரைஞர்கள் திமிருடன் பேசி, சிறப்பு நீதிபதிகளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டனர்.

தனி நீதிமன்ற விசாரணை மூலம் விரைவான தீர்ப்புக்கு வழி கிடைக்கும் என்ற தமிழக அரசின் நடவடிக்கை சரியானதே. ஆனால், இந்த விசாரணையைக் கூட, மைய அரசில் பங்கேற்கும் முன்பே இழுத்தடித்தவர்தான் ஜெயலலிதா. இந்த தனி நீதிமன்ற விசாரணை செல்லாது என உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, விசாரணையையே முடக்கி வைத்திருந்தார்.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைந்ததும், உயர் நீதிமன்றத்தில் தனி நீதிமன்றம் அமைத்ததை எதிர்த்து ஜெயா தொடுத்திருந்த வழக்கினை விசாரித்து வந்த ஒரு நீதிபதி மாற்றப்பட்டார். இதுவரை மைய அரசுத் தரப்பில் நீதிமன்றங்களில் வழக்காடிய வழக்கறிஞர்கள் கூண்டோடு மாற்றப்பட்டு, அ.தி.மு.க. சார்பு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு, அந்த நியமன உத்தரவை ஜெயலலிதாவேதான் கைப்பட கொடுத்தார்.

தனி நீதிமன்ற விசாரணை செல்லும் என்று தீர்ப்பு வழங்கிய லிபரான் சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து உடனே மாற்றப்பட்டார். இதற்கிடையே 'ஜெ'யின் அந்நிய செலவாணி மோசடியை விசாரித்த பேஷ்பருவா என்ற அதிகாரி மாற்றப்பட்டார். தற்போது, ஜெயலலிதாவுக்கு ஆதரவாகச் செயல்படுமாறு தான் நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும், மறுத்ததால் அசாமுக்கு மாற்






படிப்பகம்

www.padippakam.com

**சிறப்பு நீதிமன்றங்கள் தடையின்றிச் செயல்பட்டால், அவை, ஜெயாவின் ஊழல் குற்றங்களுக்கு, அவர் ஆறு ஆண்டுகாலம் தேர்தலில் நிற்கத் தடை விதிக்கலாம்; ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழகத்தையே மொட்டையடித்த கிரிமினல் ஜெயாவை, கேவலம் தேர்தலில் நிற்கத் தடை விதிப்பது தகுந்த தண்டனையாகி விடுமா? ஆனால், இந்த குறைந்தபட்ச தண்டனைகூட, ஜெயாவிற்குக் கிடைத்துவிடக் கூடாது என்பது தான் பா.ஜ.க.வின் விருப்பம்.**

றப்பட்டதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ள பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ஒருவர், தனது மாற்றல் உத்தரவைத் தடை செய்யக் கோரி நீதிமன்றம் சென்றுள்ளார்.

'மைய அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வது குறித்து உரிய நேரத்தில் உரிய முடிவை அ.தி.மு.க. எடுக்கும்' என ஜெயலலிதா மிரட்டிய இரண்டொரு நாளிலேயே, மைய அரசு தனி நீதிமன்ற வழக்குகளை மாற்றி உத்தரவிட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம்தான் மைய அரசு தனி நீதிமன்றம் அமைத்தது சரி என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தது.

அதற்குள்ளாக தனது முடிவை மைய அரசு மாற்றிக் கொண்டு, ஜெயலலிதாவின் முடிவை ஏற்றதால்தான், இந்த உத்தரவு குறித்த பா.ஜ.க.வின் நொண்டிச் சமாதானங்கள் பல்லிளிக்கின்றன.

கட்டுச் சோற்றுக்குள் பெருச்சாளியைக் கட்டிக் கொண்ட கதையாக, உலக மகா ஊழல் ராணி ஜெயலலிதாவின் ஆதரவில் மைய ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க. ஊழல் எதிர்ப்பு முழக்கமிடுகிறது. பீகாரில் லல்லுவின் ஊழலுக்கு சி.பி.ஐ. விசாரணை கேட்டுப் போராட்டம் நடத்திய பா.ஜ.க., 'ஜெயா'வின் மிரட்டலுக்குப் பணிந்து தனி நீதிமன்ற விசாரணையை முடக்க உத்தரவிடுகிறது. தனி நீதிமன்றம் அமைக்கும் உரிமை, மைய அரசுக்கா, மாநில அரசுக்கா எனத் திசை திருப்ப முயல்கிறது.

மாநில ஆட்சியதிகாரத்தில் இல்லாத போதே, மைய அரசு உத்தரவுக்கு எதிராகப் போராடும் வக்கீல்கள் மீது, அ.தி.மு.க. வக்கீல்களை ஏவி ரௌடித்தனம் பண்ணுகிறார். மடியில் கனமில்லை என்றால் தனி நீதிமன்றம் என்ன, எத்தனை சிறப்பு நீதிமன்றம் வந்தாலும் வழக்காட வேண்டியது தானே?

நடக்கின்ற விசயங்களிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இருக்கின்ற சட்ட வரம்புகளுக்குள் தனி நீதிமன்றம் செல்லும் என உச்ச நீதிமன்றம் கூறி, விரைவாகத் தீர்ப்பு வந்தாலும், அதிகபட்சம் ஆறு ஆண்டுகள் தேர்தலில் நிற்க ஜெ'விற்கு தடை விதிக்கலாம்.

ஆனால் தமிழகத்தையே மொட்டையடித்து, ஆயிரங் கோடிக்கு மேல் மக்கள் சொத்தைக் கொள்ளையிட்ட கழிசடை நாயகி 'ஜெயா'வின் ஊழல் சொத்துக்களைப் பறித்தெடுக்க இந்த சட்டத்தில் இடமில்லை. பெரும்பாலான மக்கள் 1996 தேர்தலில் ஜெயாவை விரட்டியடித்து, தோற்கடித்தது, ஊழல் சொத்துக்களைப் பறித்தெடுப்பதற்குதான். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதால் ஜெயா குற்றமற்றவர் என்று மக்கள் கூறிவிடவில்லை.

அரசியலையே சீரழித்து, கழிசடை அரசியலாக்கி, அதில் ஓரளவு செல்வாக்கு இருக்கும் வரை இந்த ஊழல் பேர்வழிகளை சட்டவரம்பிற்குள் ஒன்றும் செய்ய முடியாது. 'லோக்பால்' சட்டம் கொண்டு வருகிறேன் என பா.ஜ.க. ஊழலுக்கு எதிராகப் பேசுவது, கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானமேறி வைகுண்டம் போன கதைதான்.

ஜெயா ஊழல் வழக்கை நடத்த விடாது இழுத்தடிக்கும் பாரதீய ஜனதாவுக்கு ஊழல் எதிர்ப்புப் பற்றிப் பேச யோக்கியதையேயில்லை.

ஊழலுக்கெதிராக கிளர்ந்தெழுந்த மக்களின் கோபாவேசத்தை சட்டவாதத்திற்குள் முடக்கினார்கள். இன்று இதையே மைய - மாநில அரசுகளுக்கிடையான விவாதமாக்கி, ஊழல் பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியில் இறங்கி விட்டனர். இதற்கிடையே நடக்கும் வாதப் பிரதிவாதங்களில் 'ஊழலை ஒழிக்க முடியுமா?' 'எங்குதான் ஊழல் இல்லை?' என்று ஊழலை ஒன்றுமில்லாத விசயமாக்க முயல்கின்றனர்.

உழைத்து ஓடாகத் தேய்ந்த மக்கள் கூலி உயர்வு கேட்டாலே சுட்டுக் கொல்லும் ஓட்டுப் பொறுக்கிகள், மக்கள் வரிப் பணத்தைச் சூறையாடி, உல்லாச - ஊதாரி - ஆபாச - வக்கிர வாழ்க்கை வாழ்கிறார்கள். ஊழல் வழக்குகளை ஒழித்துக் கட்டும் முயற்சியில் இந்திய அரசியலில் புதிய கழிசடைத்தனத்தை உருவாக்குவதில் முன்னோடியாக உள்ளார் கழிசடை அரசியல் நாயகி ஜெயலலிதா.

• மாரி

## 'கொத்தடிமைத்தனத்தை' ஒழித்த ரூட்ஸ் தொழிலாளர்கள்!

கோவை, தொப்பம்பட்டி பகுதியில் 'ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ்' நிறுவனத்தைச் சேர்ந்த "ஹாரன்" டிவிசன் நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்தில் மிக நீண்ட காலமாகவே பயிற்சியாளர் திட்டம் என்ற பெயரில் மிக மோசமான கொத்தடிமைத்தன சுரண்டல் நடந்து வருகிறது.

இந்நிறுவனத்தில் 20 வயது இளைஞர்களை பயிற்சியாளர் என வேலைக்கு எடுக்கின்றனர். 7 ஆண்டுகள் பயிற்சி என்று சொல்லி அந்த இளைஞர்களின் உழைப்பை ஒட்டச் சுரண்டுகின்றனர். 27 வயதில் பயிற்சியை முடித்த அந்த இளைஞர்களுக்கு வேலைக்கான உத்தரவாதம் உள்ளதா என்றால் அதுவும் கிடையாது. நிரந்தரத் தொழிலாளியாக்குவோம் என்று ஆசைக் காட்டித்தான் வேலையில் சேர்க்கின்றனர். ஆனால் 5 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்விதக் காரணமுமின்றி பயிற்சியிலிருந்து விரட்டியடித்து விடுகின்றனர். இதுவரை இப்படி விரட்டியடிக்கப்பட்ட 300-க்கும் அதிகமாக இளைஞர்கள் வேலையின்றி வீதியில் அலைகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் இதே போல 7 தொழிலாளர்களை நிர்வாகம் விரட்டியடித்தது. இந்தச் சட்ட விரோத வேலை நீக்கத்தை இனிமேலும் அனுமதிக்கக் கூடாது என்று 120-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தொழிலாளர் உதவி ஆணையராக உள்ள உமாகாந்தன் என்ற அதிகாரி, நிர்வாகத்திடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு, சமசர பேச்சு வார்த்தை என்ற பெயரில் தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்க முனைந்தார். உடனே தொழிலாளர்கள் அனைவரும் 2.2.99-இல் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்திற்குள் நுழைந்து சுவரொட்டிகள் ஒட்டி, அதிகாரி உமாகாந்தனைச் சுற்றி வளைத்து, முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். வேறு வழியின்றி அந்த அதிகாரி நிர்வாகத்திடம் பேசி, தொழிலாளர்களின் நியாயத்தைக் கூறுவதாக ஏற்றுக் கொண்டார். அதன்படி 22.2.99 அன்று வேலை நீக்கம் செய்த 7 தொழிலாளர்களையும் வேலையில் சேர்த்துக் கொள்ள நிர்வாகம் ஒப்புக் கொண்டது. மேலும் 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தவர்களை நிரந்தரமாக்கவும் நிர்வாகம் ஒப்புக் கொண்டது.

கோவை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ரூட்ஸ் ஹாரன் டிவிசன் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்து சுவரொட்டிகள் ஒட்டி வந்தனர். நிர்வாகத்திடம் சுவரொட்டிகள் ஒட்டி வந்தனர். நிர்வாகத்திடம் கையூட்டுப் பெற்ற அப்பகுதி போலீசு, பு.ஜ.தொ.மு.வினரின் சுவரொட்டிகளைக் கிழித்துத் தடை செய்துள்ளதாக மிரட்டினர். இந்த போலீசாரின் அயோக்கியத்தனத்தை முறியடித்து, தொடர்ந்து பு.ஜ.தொ.மு.வினர் சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

—பு.ஜ.தொ.மு., கோவை.


படிப்பகம்

www.padippakam.com

# ''ரேஷன் கடைகளை மூடு''

# உலக வங்கி உத்தரவுக்கு குரங்காக ஆடும் பா.ஜ.க.

''ஏழைகளுக்கு அரிசிச் சோறெல்லாம் எதற்கு? முடிந்தால் தண்ணீரைக் குடித்து அவர்கள் உயிர் பிழைத்துக் கொள்ளட்டும்; இல்லையென்றால், பட்டினி கிடந்து சாகட்டும்'' எனச் சொல்லாமல் சொல்லி விட்டது பா.ஜ.க. கூட்டணி அரசு. ''நியாய'' விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலையை பா.ஜ.க. கூட்டணி அரசு உயர்த்தியிருப்பதற்கு இப்படிதான் பொருள் கொள்ள முடியும். வெங்காயத்தின் விலை தாறுமாறாக உயர்ந்து கொண்டே சென்ற பொழுது, ''ஏழைகளுக்கு வெங்காயம் எதற்கு?'' என எகத்தாளம் பேசிய இந்து மதவெறியர்களிடம், மக்களின் வாழ்க்கை பற்றி நல்லெண்ணமா இருந்திட முடியும்?

பா.ஜ.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் பதவியில் உட்கார்ந்தவுடனேயே, சென்ற ஆண்டு வரவு - செலவு அறிக்கையில் மக்களின் மீது 9,000 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்தன; இதையடுத்து, பணத்தின் மதிப்பைக் குறைத்து, அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை தாறுமாறாக உயர்த்தியது. வெங்காயம் விலை உயர்ந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, கள்ளச் சந்தை வியாபாரிகள் 3,000 கோடி ரூபாய் அளவிற்குக் கொள்ளையடிப்பதற்குத் துணை போனது, இந்து வியாபாரிகளின் கட்சியான பா.ஜ.க. அஞ்சல் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.

இப்பொழுது, 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு அறிக்கையினை தாக்கல் செய்வதற்குச் சற்று முன்னதாக, அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு,.. யூரியா - இவற்றிற்கு வழங்கி வந்த மானியத்தைக் குறைத்துக் கொண்டு, இப்பொருட்களின் விலையை உயர்த்தியதன் மூலம், பா.ஜ.க. கூட்டணி அரசு மக்களிடமிருந்து 3,400 கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டுள்ளது. மக்களின் அடிமடியிலேயே கைவைத்த பின்னும், இவர்கள் திருப்தியடைந்துவிடப் போவதில்லை.

— இப்படி ஒரே ஆண்டிற்குள் அடுத்தடுத்து தொடர்ச்சியாக வரிச்சுமையை ஏற்றி, விலைவாசியைக் கூட்டி, பா.ஜ.க. கூட்டணி அரசு எதைச் சாதித்து விடத் துடிக்கிறது?

''நாட்டின் நிதிப் பற்றாக்குறை 91,000 கோடி ரூபாயைத் தொட்டு போகிறது. இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கு மக்களுக்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை; எனவே, நாட்டின் நலனுக்காக இந்த விலையேற்றம் தவிர்க்க முடியாதது'' என பா.ஜ.க. கூட்டணி அரசு மட்டுமல்ல, தாராளமயத்தை ஆதரிக்கும் அனைவரும் நியாயம் கற்பிக்கிறார்கள்.

உணவுப் பொருட்களுக்குக் கொடுத்து வந்த மானியத்தைக் குறைத்ததன் மூலம், ''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையை ரூ. 3.50-லிருந்து ரூ. 4.52 ஆகவும், கோதுமையின் விலையை ரூ. 2.50-லிருந்து ரூ. 3.25 ஆகவும்; ''வறுமைக் கோட்டுக்கு மேல்'' வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்படும் கோதுமையின் விலையை ரூ. 6.50 ஆகவும், அரிசியின் விலைய்ய ரூ. 9.05 ஆகவும் உயர்த்தியது, மைய அரசு. சர்க்கரையின் விலை ரூ. 11.40-லிருந்து ரூ. 12/- ஆகவும், யூரியாவின் விலை டன் ஒன்றுக்கு கூடுதலாக ரூ. 400/-ம், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு கூடுதலாக பதினாறு ரூபாயிலிருந்து ரூ. 18.40 வரையிலும் உயர்த்தப்பட்டன.

இந்த விலையேற்றத்தை எதிர்க் கட்சிகளும் பா.ஜ.க.வின் சில கூட்டணிக் கட்சிகளும் எதிர்த்த பின், ''வறுமைக் கோட்டுக் குக் கீழ்'' வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமையின் விலை உயர்வை மட்டும் திரும்பப் பெற்றுக் கொண்ட மைய அரசு, பிற விலையேற்றங்கள் அறிவித்தபடி நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறிவிட்டது..

''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழ்ந்து வரும் மக்களின் மீது சுமத்தப் பட்ட விலை உயர்வை பா.ஜ.க. அரசு திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டதால், நமது நாட்டில் மிகவும் வறிய நிலையில் வாழும் ஏழை மக்கள் அனைவரும், பா.ஜ.க. தொடுத்துள்ள இப்பொருளாதார தாக்குதலில் இருந்து தப்பி விட்டதாகக் கொள்ள முடியுமா? நாட்டின் நிதிப் பற்றாக் குறை அதிகரித்துக் கொண்டே போவதற்கும், அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், உரங்களுக்கு வழங்கப்படும் மானியங்களுக்கும் தொடர்பு உண்டா? நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கு மானியங்களுக்கும், மக்கள் நலத் திட்டங்களுக்கும் வேட்டு வைப்பதைத் தவிர, இன்று வேறு வழியே இல்லையா? - இக் கேள்விகள் பரிசீலனைக்குரியவை.

★★★

தாராளமயமாக்கலின் முன்பு வரை, ஒரே மாதிரியாக குடும்ப அட்டைகள் வழங்கி வந்த நடைமுறையை, தாராளமயத்தின் பின், உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவே கை கழுவி விட்டு, ''வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோர்'', ''வறுமைக் கோட்டுக்கு மேல் வாழ்வோர்'' என்ற புதிய நடைமுறை புகுத்தப்பட்டது. உலக வங்கி உருவாக்கிக் கொடுத்த இந்த மக்கள் விரோதத் திட்டம், சர்வகட்சி ஒத்துழைப்புடன் தான் நாடெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நியாய விலைக் கடைகளை இழுத்து மூடிவிடும் திட்டத்தின் முதல்படிதான் இந்தப் புதிய நடைமுறை.

நமது நாட்டில் கிட்டத்தட்ட 32 கோடி பேர் ''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழ்வதாக மைய அரசே ஒப்புக் கொண்ட பின்னும், அவர்களுள் 15 கோடி பேருக்குதான் ''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழ்பவர் எனக் குறிக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. மீதமிருக்கும் 17 கோடி பேர் ''வறுமைக் கோட்டுக்கு மேலே'' தள்ளப் பட்டனர். இதன் மூலம், மைய அரசே ஒப்புக் கொண்ட வறிய மக்களில் 50 சதவீதத்துக்கும் மேலானோர், நியாய விலைக் கடைகளிலும் அதிக விலை கொடுத்துதான் உணவுப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கிவிட்டனர்.

''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழ்






படிப்பகம்

www.padippakam.com

வோர் எனக் குறிக்கும் குடும்ப அட்டைகளைப் பெற்றவர்களுக்கும் மாதமொன்றுக்கு 10 கிலோ உணவுப் பொருட்கள்தான் ''ரேஷன்'' கடைகளில் வழங்கப்படுகிறது. மாநில அரசுகள் 10 கிலோவிற்கு மேல் வழங்கினால், அதற்குண்டான மானியத்தை, அந்தந்த மாநில அரசுகள்தான் தர வேண்டும் என ஏற்கனவே மைய அரசு கைகழுவி விட்டது. மானிய விலையில் கிடைக்கும் இந்த 10 கிலோ அல்லது 15 கிலோ அரிசி/கோதுமையை வைத்துக் கொண்டு, இரண்டு பேர் கொண்ட ஏழைக் குடும்பம் கூட மாதம் முழுவதையும் ஓட்டி விட முடியாது.

இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ள புள்ளி விவரப்படி, நமது நாட்டில் வாழும் 32 கோடி ஏழை மக்களுக்கும், முழுமையான அளவில் உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும் என்றால், ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 5 கோடி டன் உணவுப் பொருட்கள் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட வேண்டும். ''வறுமைக் கோட்டுக்குக் கீழ்'' வாழும் குடும்ப அட்டைப் படி எடுத்துக் கொண்டால் கூட, ஆண்டொன்றுக்கு 2.3 கோடி டன் உணவுப் பொருட்கள் தேவைப்படும். ஆனால், தாராளமயமாக்கலின் பின், எந்தவொரு ஆண்டிலும், நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் 2 கோடி டன்னை எட்டியதில்லை. 1995-96 ஆம் ஆண்டில், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோர், மேல் வாழ்வோர் என குடும்ப அட்டைகள் பெற்ற எல்லோருக்கும் 1.47 கோடி டன் உணவு தானியங்கள்தான் வழங்கப்பட்டன.

ஏழை மக்களில், ஒரு குடும்பம் கூட முழுமையாகப் பலன் பெறும்படி, மானியம் வழங்கப்படுவதில்லை; சரிபாதிக்கும் மேலான ஏழை மக்களுக்கு மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவது தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது என்பதுதான் உண்மை. மக்கள் உயிர் வாழ்வதற்கும், உழைப்பதற்கும் அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்களுக்கும், இந்தியாவின் உயிர்நாடியான விவசாயிகளுக்கும் மானியம் வழங்குவதைவிட, அகண்ட பாரதக் கனவின் ஆயுதமான அணு சோதனைகளுக்கு மானியம் வழங்குவதைதான் இந்து மதவெறிக் கும்பல் முக்கியமானதாகக் கருதுகிறது.

நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, சொந்த நாட்டு மக்களுக்கு மானிய விலையில் உணவுப் பொருட்களையும், விவசாயிகளுக்கு உரமும் வழங்குவதை நிறுத்திவிடத் துடிக்கும் இந்து மதவெறிக் கும்பல், 50 கோடி முதல் 100 வரை மூலதனமிடும் முதலாளிகளுக்கு 2.5 கோடி ரூபாயும், 200 கோடி மூலதனமிடுபவர்களுக்கு 10 கோடியும் மானியமாகக் கொடுத்து 'உதவுவது' எந்த வகை நியாயம்?

தாராளமயமாக்கலின் பின், உள்நாட்டு தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 40 சதவீத வரி 35



**ரேஷன் பொருட்கள் விலை உயர்த்தப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் தி.மு.க., த.மா.கா., இடதுசாரி கட்சிகள். இவர்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஆண்டபொழுது சாதித்தது என்ன?**

சதவீதமாகவும், பன்னாட்டு நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 55 சதவீத வரி 48 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது; தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டு வந்த 7.5 சதவீத கூடுதல் வரி முற்றிலுமாக நீக்கப்பட்டது; மும்பய் பங்குச் சந்தையில் பதிவு செய்து கொண்டுள்ள 1,047 நிறுவனங்கள் வருடமொன்றுக்கு 14,000 கோடி ரூபாய் இலாபமீட்டுகின்றன. இவை, இன்றுவரை ஒரு பைசா கூட வரியாகக் கட்டியதில்லை; பா.ஜ.க., தனது வரவு - செலவு அறிக்கையில், தரகு முதலாளிகளுக்கு மேல் 950 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகள் அளித்தது;

என்ரான் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் அமைக்கவுள்ள மின் நிலையங்களுக்கு இலாப உத்தரவாதமளிக்கும் ஒப்பந்தம் போடப்பட்டது; என்ரான், வெளிநாடுகளில் இருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு முற்றிலுமாக சுங்க வரி விலக்கு அளிக்கப்பட்டது. சொகுசுக் கார்களைத் தயாரித்து விற்பனை செய்து வரும் ஹூண்டாய், ஃபோர்டு போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் 14 ஆண்டு முதல் 21 ஆண்டுகள் வரை விற்பனை வரியே செலுத்த வேண்டியதில்லை. அந்நிய நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நூற்றுக்கணக்கான பொருட்களுக்கு காங்கிரசும், ஐக்கிய முன்னணியும், பா.ஜ.க.வும் போட்டி போட்டுக் கொண்டு சுங்கத் தீர்வையைக் குறைத்தன.

இந்த வரிச் சலுகைகள், வரி விலக்குகள் மூலம் தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் கிட்டதட்ட 60,000 கோடி ரூபாய் கூடுதலாக இலாபமடைந்துள்ளன. நிதிப் பற்றாக்குறையின் ஆணி வேர் எங்கே இருக்கிறது என்று இப்பொழுது புரிகிறதல்லவா? இது ஒருபுறமிருக்க, இறக்குமதி/ஏற்றுமதி வர்த்தகம் செய்துவரும் இந்திய நிறுவனங்கள், வரி ஏய்ப்பில் ஈடுபட்டு, 1994-95 ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட 40,000 கோடி ரூபாய் பெறுமான அந்நியச் செலவாவணி வருவாயை அமெரிக்காவிற்குள் கடத்தி வந்திருப்பதாக மூன்று அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் கண்டறிந்து கூறியுள்ளனர்; இந்தியத் தரகு முதலாளிகளும், பெரு வணிகர்களும் வரி ஏய்ப்பு மோசடிகளில் ஈடுபட்டு, சட்ட விரோதமாகக் குவித்து வைத்திருக்கும் கருப்புப் பணம், 1996-97 ஆம் ஆண்டு கணக்குப்படி 2,65,000 கோடி ரூபாய் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை அனைத்துமே சட்டப்படியும், நியாயப்படியும் நமது நாட்டிற்குச் சேர வேண்டிய வருமானம். இந்தப் பெருந்தொகையைக் கைப்பற்றினாலே, நாட்டின் நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டிவிட முடியும். இதற்குத் தயாராக இல்லாத இந்து மதவெறிக் கூட்டணி அரசு, மக்களின் அரை வயிற்றுக் கஞ்சியில் மண்ணை அள்ளிப் போடுகிறது. ஒரிசாவில் நடந்துவரும் பட்டினிச் சாவுகளைத் தேசிய மயமாக்குவதுதான் பா.ஜ.க. கூட்டணியின் தேசிய செயல் திட்டம் போலும்!

இந்த விலையேற்றத்தை, மானியங்கள் குறைக்கப்படுவதை நாம் பத்தொடு பதினொன்றாகக் கருதிவிட முடியாது. அரிசிக்கும், கோதுமைக்கும், மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும், உரத்திற்கும்... இப்படி மக்களின் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படும் எல்லாதவிதமான மானியங்களையும் படிப்படியாக ஒழித்து விடுவோம் என இந்திய அரசு உலக வர்த்தகக் கழகத்திடம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ளது. அந்த அடிமைச் சாசனத்தின் கட்டளையை தான், இப்போலி சுதேசிக் கும்பல் நடைமுறைப்படுத்தியுள்ளது; இப்படி நாடு ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைக்கப்படுவதை, ''தேசத்தின் முன்னேற்றம்'' எனப் பித்தலாட்டம் செய்யும் இந்து மதவெறிக் கும்பல், எத்தகைய கடைந்தெடுத்த துரோகிகளாக, இருக்க வேண்டும்?!


• செல்வம்



படிப்பகம்

# மேல்சாதி நிலப்பிரபுக்களின் கொலைவெறி பா.ஜ.க.வின் பதவி வெறி

**ஆட்சிக் கலைப்பினால், பீகாரில் தாழ்த்தப்பட்டோர் படுகொலையைத் தடுத்து நிறுத்திட முடியாது. நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளுக்கும், நிலப்பிரபுக்களின் கொலைகார குண்டர் படைகளுக்கும் இடையே நடக்கும் சாதிய - வர்க்க மோதலை மூடி மறைத்து விட்டு, இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் முடியாது.**



முன்னா: இரண்டு வயதான அப்பெண் குழந்தைக்கு அவளது பெற்றோர்கள் இட்ட செல்லப் பெயர் அது. காலையில் தூக்கத்திலிருந்து விழித்த முன்னா எழுந்து உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தாள். தன்னை யாரும் தூக்கவோ கவனிக்கவோ இல்லையே என்று வீறிட்டு அழுதாள். முன்னாவுக்குத் தெரியாது; தன்னை அணைத்தபடி படுத்திருந்த அம்மா, அக்கா, அண்ணன், அப்பா அனைவருமே நள்ளிரவில் சுட்டுக் கொல்லப்பட்டு பிணமாகிக் கிடக்கிறார்கள் என்று. ''தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் நாளை நக்சலைட்டாக மாறிவிடும்'' என்று பெண்களையும் பச்சிளம் குழந்தைகளையும் குறிவைத்து,பீகாரின் சங்கர்பிகா கிராமத்தில் உயர்சாதி நிலப்பிரபுக்களின் குண்டர் படையான ரன்பீர் சேனா நடத்திய கொலை வெறியாட்டத்தில் தப்பிப் பிழைத்த கைக்குழந்தைதான் முன்னா!

பீகாரின் ஜெகன்னாபாத் மாவட்டத்திலுள்ள சங்கர் பிகா கிராமத்தை கடந்த சனவரி 24-ந் தேதியன்று நூற்றுக்கும் மேற்பட்ட ரன்பீர் சேனா குண்டர்கள் துப்பாக்கிகளுடன் நள்ளிரவில் முற்றுகையிட்டனர். தாழ்த்தப்பட்டோர் நிறைந்துள்ள இக்கிராமத்தில் ஒவ்வொரு குடிசையையும் 4, 5 குண்டர்கள் சூழ்ந்து கொண்டு, ''ரன்பீர் சேனா வாழ்க!'' என்று கூச்சலிட்டபடியே, கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். பேரொலி கேட்டு விழித்து, பயங்கரத்தை அறிந்து, சுவர் அருகே ஒண்டிய பெண்களையும் குழந்தைகளையும் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. இக்கோரமான தாக்குதலில் தப்பிப் பிழைத்த ஒரு பெண், தனது 6 மாத கைக்குழந்தை சுட்டுக் கொல்லப்பட்ட துயரம் தாளாமல் அரற்றுகிறார். சங்கர்பிகா கிராமத்தில் குடிசைகளில் உறங்கிக் கொண்டிருந்த மனித உயிர்களை மட்டுமல்ல; குடிசையினுள் கட்டி வைத்திருந்த ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டிகளைக் கூட ரன்பீர் சேனா குண்டர்கள் காட்டுமிராண்டித் தனமாக சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

1997 டிசம்பர் இறுதியில், இதே ஜெகன்னாத்பாத் மாவட்டம் லட்சுமணபூரில் ரன்பீர் சேனா குண்டர்கள் 61 தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழித்தனர். நள்ளிரவில் ஓசையின்றி கிராமத்தினுள் நுழைந்த அவர்கள், உழைத்த களைப்பில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோரின் குரல்வளையையும் நெஞ்சையும் கத்திகளாலும் கோடரிகளாலும் பிளந்தனர். ''அதே பாணியில் எங்கள் கிராமத்தில் நடந்திருந்தால் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்போம்; ஆனால் இம்முறை அவர்கள் துப்பாக்கியால் சுட்டதால், பேரொலி கேட்டு எல்லோரும் சுவர் அருகே பதுங்கிக் கொண்டதால் சாவு எண்ணிக்கை 30 பேராக சற்றே குறைந்துள்ளது'' என்று வேதனையுடன் கூறுகிறார், தனது மனைவி - குழந்தைகளைப் பறிகொடுத்த தாழ்த்தப்பட்ட இளைஞர்.

சங்கர்பிகா படுகொலைகளைத் தொடர்ந்து மாநிலமெங்கும் போலீசாருக்கு சிறப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ரோந்துப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. மத்திய அரசு பெருமளவில் துணை இராணுவப் படைகளைக் கொண்டு வந்து குவித்தது. ஆனாலும் சங்கர்பிகா படுகொலை நடந்த அடுத்த 15-வது நாளில், அதே ஜெகன்னாபாத் மாவட்டத்திலுள்ள நாராயண்பூரில் ரன்பீர் சேனா நள்ளிரவில் திடீர்த் தாக்குதல் நடத்தி 12 தாழ்த்தப்பட்டோரைச் சுட்டுக் கொன்றது.

''சங்கர் பிகாவும் நாராயண்பூரும் அமைதியான கிராமங்கள். இங்கு நிலத்தகராறோ கூலிப் பிரச்சினைக்கான போராட்டங்களோ, விவசாய சங்கங்களோ, நக்சல்பாரி அமைப்புகளோ கிடையாது. ரன்பீர் சேனாவின் தாக்குதல் இலக்குகளாக இக்கிராமங்கள் இருந்ததில்லை. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதுவும் நாங்கள் எடுக்க இயலவில்லை'' என்று போலீசு உயரதிகாரிகள் கூறுகின்றனர். உண்மைதான். போராட்டமோ சங்கமோ இல்லாத அமைதியான கிராமங்கள்தான் இவை. ஆனாலும் ரன்பீர் சேனா இத்தொடர் பயங்கரவாதக் கொலை வெறியாட்டங்களை நடத்தக் காரணம் என்ன?

இது ஜெகன்னாத் மாவட்டம் முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை. எந்த ஊரிலாவது தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்கு எதிராக நக்சல்பாரிகளுடன் இணைந்து சங்கம் கட்டினாலோ, போராடினாலோ இந்த கதிதான் ஏற்படும் என்று விடுக்கப்பட்டுள்ள மிரட்டல்.

இத்தனைக்கும் உயர்சாதி பூமிகார் நிலப்பிரபுக்களின் குண்டர் படையான ரன்பீர் சேனா, பீகாரில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். ஆனாலும் 1994-லிருந்து இன்று வரை ரன்பீர் சேனா 20 இடங்களில் பயங்கரவாதக் கொலை வெறியாட்டங்களை தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தியுள்ளது. பீகாரில் ரன்பீர் சேனா மட்டுமல்ல; நக்சல்பாரி பேரெழுச்சிக்குப் பிறகு 1970-களிலிருந்து 1980-க்குட்பட்ட பத்தாண்டுகளில் யாதவ சாதி நிலப்பிரபுக்களின் லோரிக் சேனா, ராஜபுத்திர சாதி நிலப்பிரபுக்களின் குன்வர் சேனா, கங்கா சேனா, பார்ப்பன - பூமிகார் சாதி நிலப்பிரபுக்களின் சன்லைட் சேனா - என கணக்கற்ற நிலப்பிரபுத்துவ குண்டர் படைகள் கட்டியமைக்கப்பட்டு தாக்குதலை நடத்தி வந்தன. இன்று இவை ஒன்று கலந்து பூமிகார் சாதி நிலப்பிரபுக்களால் தலைமை தாங்கப்படும்

www.padippakam.com



கொலை வெறியாட்டத் தீமூட்டி.குளிர் காயும் ரன்பீர்சேனா குண்டர்கள்.

உயர்சாதி பண்ணையார்களின் படையாக ரன்பீர்சேனா வளர்க்கப்பட்டுள்ளது. 1986-லிருந்து இன்று வரை இக்குண்டர் படை 989 பேரைப் படுகொலை செய்துள்ளது.

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டாவது மாநிலமான பீகாரில், ராஜபுத்திரர், பூமிகார், பார்ப்பனர் ஆகிய உயர் சாதியினர்; அதற்குக் கீழே பிற்பட்டவர்களான யாதவர், குர்மி சாதியினர்; தீண்டத்தகாதவர்களாக ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் என்கிற சாதிய சமூக அடுக்குமுறை நீண்ட நெடுங்காலமாக மாறாமல் நீடிக்கிறது. உயர் சாதியினரான நிலப்பிரபுக்கள் தமது வர்க்க - சாதிய ஆளுமைக்கும் அதிகாரத்துக்கும் எதிராக சிறு சலனம் ஏற்பட்டால் கூட கொலை வெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடுவது சர்வ சாதாரணமாக உள்ளது. அதிலும் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக, அதன் தீவிர உறுப்பினர்களாக ரன்பீர் சேனா உள்ள நிலையில் அதன் கொட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. இதை, படுகொலைகள் நடந்த நாராயண்பூருக்குப் பார்வையிட வந்த மத்திய அமைச்சர்கள் குழுவிடமே பாதிக்கப்பட்ட மக்களே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோரை தமக்கு ஆதரவாகத் திரட்ட லல்லு கும்பல், இலவச வேட்டி - சேலை - போர்வை என கவர்ச்சி நாடகமாகடிய போதிலும், பீகாரில் கூலி - ஏழை விவசாயிகளான தாழ்த்தப்பட்டோர் தமது உரிமைக்காகப் போராடவோ, சங்கம் சேரவோ முடியாது. உயர்சாதி நிலப்பிரபுக்கள் வைத்ததுதான் சட்டம்; இட்டது தான் நீதி என்கிற ஜனநாயக விரோத கொடுங்கோன்மைதான் நிலவுகிறது. இத்தகைய அடக்குமுறைக்கெதிராக தாழ்த்தப்பட்டோரையும் கூலி - ஏழை விவசாயிகளையும் பெருமளவில் திரட்டி உரிமைக்காகப் போராடி வருவது நக்சல்பாரி அமைப்புகள் மட்டும்தான்.

எனவே இத்தகைய நியாயமான ஜனநாயக உரிமைக்கான போராட்டங்களை, நக்சல்பாரி தீவிரவாதம் என்று சித்தரித்து, சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாக்கி, நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தினரை நர வேட்டையாடுவது; சிறையிலிட்டு வதைப்பது என்பதாக எல்லா ஆட்சியாளர்களும் நீண்ட காலமாக இந்த விவகாரத்தில் ஓரணியில் நிற்கின்றனர். பீகாரில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுவது என்ற பெயரில், நக்சல்பாரி ஆதரவு கிராமங்களில் போலீசு முகாமிட்டு கூலி - ஏழை விவசாயகளை ஒடுக்கி நிலப்பிரபுகளுக்கு விசுவாசமாக சேவை செய்து வருகிறது.

குறிப்பாக, லட்சுமணப்பூரில் நடந்த தாழ்த்தப்பட்டோர் படுகொலைகளுக்குப் பிறகு, சிறப்பு போலீசுப் படைகள் குவிக்கப்பட்டுள்ள கிராமங்கள் அனைத்துமே நக்சல்பாரி இயக்க ஆதரவு கிராமங்கள் தான். போலீசு முகாமிட்டுள்ள பகுதிகள் அனைத்திலுமே அரசு பயங்கரவாத வெறியாட்டம்தான் நடக்கிறது. தேடுதல் வேட்டை என்ற பெயரில் சூறையாடல், பாலியல் வன்முறை, பொய் வழக்கு போட்டு மிரட்டிப் பணம் பறித்தல், ஆடு - மாடுகளை அபகரித்தல், கைது - சித்திர வதை என போலீசு அட்டூழியம் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. அதேசமயம் நிலப்பிரபுக்களின் குண்டர் படைகள் இயங்கும் உயர்சாதியினரின் கிராமங்களில் பெயருக்குக் கூட ஒரு போலீசு கிடையாது. இந்த உண்மைகளை டெல்லியைச் சேர்ந்த ஜனநாயக உரிமைக்கான குடிமக்கள் சங்கம் (PUDR), தனது நேரடி ஆய்வுகள் மூலம் ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளது.

இத்தகைய ஜனநாயக உரிமைகளற்ற அரசு பயங்கரவாத அடக்குமுறை ஒருபுறம், நிலப்பிரபுக்களின் சாதிய - வர்க்கக் கொலை வெறியாட்டங்கள் மறுபுறம் எனும் இரட்டைக் கொடுங்கோன்மையின் கீழேதான் நீண்ட காலமாக பீகார் உள்ளது. காங்கிரசு கொடுங்கோலன் ஜெகன்னாத் மிஸ்ராவின் நிலையான ஆட்சியோ, லல்லு - ராப்ரி தேவியின் 'சமூக நீதி' ஆட்சியோ இவற்றுக்கெதிராக ஒரு துரும்பைக் கூட அசைத்தது கிடையாது. பீகாரில் ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதிலும், கம்யூனிசப் புரட்சியை ஒடுக்குவதிலும் எல்லா வண்ணக் கூட்டணிகளும் எப்போதும் ஒன்றுபட்டு ஓரணியில்தான் நிற்கின்றன.

இந்நிலையில் பாரதீய ஜனதாவுக்கு எதிரான அரசியல் நடத்திவரும் லல்லு கும்பல், உ.பி.யின் முலயங் சிங் யாதவுடன் சேர்ந்து அமைத்துள்ள பிற்பட்ட சாதிகளின் மூன்றாவது அணியும், அது காங்கிரசுக்கு ஆதரவாக நிற்பதும் பாரதீய ஜனதாவின் இந்துவெறி ஏகபோக ஆட்சிக் கனவுக்குத் தடையாக உள்ளன. கடந்த செப்டம்பரில் நடந்த 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைவர் கொலையைச் சாக்காக வைத்து லல்லு கும்பலின் ஆட்சியைக் கலைக்க முயற்சித்தது. ஆனால் 'குடியரசு'த் தலைவரின் ஒப்புதல் கிடைக்காததால், இப்போது ரன்பீர் சேனாவை ஏவி தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழித்து, படுகொலைகளுக்கு முதலைக் கண்ணீர் வடித்து பீகாரில் ஆட்சியைக் கலைத்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் படுகொலையைக் காட்டி பீகார் ஆட்சிக் கலைப்பு நியாயமானதுதான் என்று பாரதீய ஜனதா கூட்டணி ஒருபுறமும், எதிர்க்கட்சி ஆளும் அரசைப் பழிவாங்க அநியாயமாக ஆட்சியைக் கலைத்து 'ஜனநாயகப் படுகொலை' செய்து விட்டார்கள் என்று லல்லு, போலி கம்யூனிஸ்டு அணி மறுபுறமாகவும் நின்று அரசியல் லாவணி நடத்துகின்றன. ஆட்சிக் கலைப்பை எதிர்த்து போராட்டங்கள் நடத்தியும், நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சிக் கலைப்பு தீர்மானத்தை ரத்து செய்யவும் இழந்த சொர்க்கத்தை மீட்க லல்லு அணி கடுமையாக முயற்சிக்கிறது. பீகாரில் சட்டம் - ஒழுங்கு மோசமடைந்துள்ளதாக கூச்சல் போட்டும், அரசு பயங்கரவாத அடக்குமுறையை தீவிரபடுத்தியும், லல்லு அணியை உடைத்து விலைபேசியும் தமது கூட்டணி ஆட்சியை நிறுவ பாரதீய ஜனதா பதவி வெறியோடு அலைகிறது. இதிலே எந்த அணி வென்றாலும் தோற்றாலும், பீகாரில் நிலவும் நிலப்பிரபுக்களின் சாதிய - வர்க்க அடக்குமுறைகளையோ, போலீசு பயங்கரவாதத்தையோ முறியடித்து, ஒருக்காலும் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதில்லை.

பீகாரில் உழைக்கும் மக்களின் வாழ்வில் வசந்தத்தையும், ஜனநாயகத்தையும் உரிமைகளையும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளால் மட்டுமே நிறுவ முடியும். பெற்றோரையும் உடன் பிறப்புகளையும் இழந்து அனாதையாக நிற்கும் 'முன்னா'க்கள் நாளை நிச்சயம் அதைச் சாதிப்பார்கள்.

● [illegible]னாகரன்



படிப்பகம்

www.padippakam.com



# ஆர்.எஸ்.எஸ்.இன் நரித்தனம் முறியடிப்பு

நாடு முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களையும், கிறித்தவ, முஸ்லிம்களையும் நரவேட்டையாடி வரும் பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகளான ஆர்.எஸ்.எஸ். கும்பல், இலவச மருத்துவ முகாமொன்றை சென்னை சேத்துப்பட்டுப் பகுதி மாநகராட்சிப் பள்ளியில் 14.2.99 அன்று நடத்தத் திட்டமிருந்தனர். இதனைக் கேள்விப்பட்ட சென்னை ம.க.இ.க. தோழர்கள் 13.2.99 அன்றே 'எச்சரிக்கை! நாடு முழுவதும் முஸ்லிம், கிறித்தவ, தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்று குவித்து வரும் இந்து மதவெறியர்களின் சூழ்ச்சி அடிப்படையிலான மருத்துவ முகாமைப் புறக்கணிப்போம். பகுதியை விட்டு அடித்து விரட்டுவோம்' என்று பகுதி முழுவதும் சுவரொட்டிகள் எழுதி ஒட்டினர்.

மறுநாள் காலை பகுதியில் சில இளைஞர்களுக்கும், மாற்றுக் கட்சி அணிகளுக்கும் மகஇகவிலிருந்து அழைப்பு விடுத்தனர். சிபிஎம் கட்சி அணிகள் வருவதாகச் சொல்லி வரவில்லை. பகுதி இளைஞர்கள் யாரும் இதில் ஆர்வம் காட்டவில்லை. பெரியார் தி.க.வைச் சேர்ந்த தனசேகரன் என்பவர் மட்டும் ஆர்வமாக மகஇக தோழர்களுடன் இணைந்து வந்தார்.

ம.க.இ.க. தோழர்கள் 10 பேரும் பெ.தி.க.காரர் ஒருவரும் என 11 பேர் மாநகராட்சி பள்ளியில் நுழைந்து, 'தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதியில் பார்ப்பன மதவெறியர்களுக்கு என்னடா வேலை? பள்ளியை விட்டு ஓடு. இல்லையேல் உதைபடுவீர்கள்' என்று எச்சரித்தனர். ஒரு தோழர் அங்கு கட்டியிருந்த பேனரைக் கிழித்தெறிந்தார். ஒரு தோழர், நாற்காலி, மேசைகளை இழுத்துப் போட்டு 'ஓடுங்கடா' என மிரட்டினார். சில தோழர்கள் வெளியில் நின்று ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிராக முழக்கமிட்டு, இந்த கொலைகார கும்பலை அடித்து விரட்ட வேண்டிய அவசியத்தை விளக்கி மக்களிடையே பேசினர்.

அங்கு பாதுகாப்புக்கு வந்த போலீசிடம், 'இவர்களை உடனே வெளியேற்ற வேண்டும். யாரையும் உள்ளே அனுமதிக்கவும் கூடாது. அப்படி அனுமதித்தால் உதைப்போம்' என்றதும் யாரையும் உள்ளே விடவில்லை. மகஇக தோழர்களின் முழக்கங்கள், பிரச்சாரத்திற்குப் பின் பகுதி நண்பர்கள் சிலர் நம்முடன் இணைந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் மருத்துவர்களை திட்டி விரட்டியடித்தார். மருத்துவ முகாமை நாடி வந்த சிலரும், நமது பிரச்சாரத்தைக் கேட்டு திரும்பிச் சென்று விட்டனர்.

ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சிக்கு மாநகராட்சிப் பள்ளியில் அனுமதி தந்தது சட்ட விரோதமானது. இந்த நிகழ்ச்சியை ரத்து செய்ய வேண்டும் என போலீசு நிலையத்தில் புகார் செய்தார் ம.க.இ.க. தோழர் புவண். அங்கிருந்த போலீசு துறை உதவிக் கமிஷனர் சட்டவிரோத ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியை ரத்து செய்வதற்கு பதில் நமது தோழர்களைக் கைது செய்தார். மாலை 4 மணி வரை சட்ட விரோதமாகக் காவலில் வைத்திருந்து விட்டு, வழக்கு ஏதும் பதியாமல் விடுவித்தார்.

ஆர்.எஸ்.எஸ். என்கிற மக்கள் விரோத, தேசத் துரோக, தமிழின விரோத பார்ப்பன மதவெறி கும்பலுக்கு விசுவாச சேவை செய்து, தோழர்களைச் சட்டவிரோதமாக காவலில் வைத்திருந்த போலீசின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தி பகுதியில் உடனே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

— ம.க.இ.க., சென்னை.

# இளம் கர்ப்பிணிப் பெண்ணின் உயிரைக் குடித்த ஏ.வி.டி. நிர்வாகம்!

ஏ.வி.டி. கம்பெனியில் வேலை செய்துவரும் தொழிலாளர்களின் அவலம் பற்றி ஏற்கனவே பு.ஜ.வில் எழுதியிருந்தோம். ஏ.வி.டி. நிர்வாகம் ஒப்பந்த முறையில் ஒரு மருத்துவமனையை நடத்தி வருகிறது. மருத்துவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் கணவன், மனைவி தவிர 4 பெண்களும் ஒரு ஆணும் வேலை செய்கிறார்கள். முறையான படிப்போ தகுதியோ இவர்களுக்கு உள்ளதா என்பது சந்தேகமே.

இவர்களின் கவனக்குறைவினாலும் மெத்தனப்போக்காலும் 24 வயது சாந்தகுமாரி என்ற பெண் அவரது இரண்டாவது பிரசவத்தில் அகால மரணமடைந்தார். அவரது 4 வயதான முதல் குழந்தை தாயை இழந்து தவிக்கிறது.

கடந்த 27.1.99 காலை 10 மணிக்கு சாந்த குமாரிக்கு பிரசவ வலி வந்ததும் அர்ணாக்கல் எஸ்டேட் மருத்துவமனையில் சேர்த்தனர். மதுரையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தனியார் மருத்துவமனையில் பணிபுரியும் மீனா குமாரி என்ற உறவுப் பெண் உடனிருந்தார். சாந்த குமாரியின் நிலைமை மோசமாவதை உணர்ந்த மீனா குமாரி, மருத்துவர்களிடம் உடனே வந்து மருத்துவம் பார்க்கும்படிக் கூறியும் அவர்கள் மெத்தனமாக இருக்கவே, குழந்தை வயிற்றிலேயே இறந்தது. சற்று நேரத்தில் தாயும் பரிதாபமாக துடிதுடித்து இறந்தார். சாந்த குமாரி வேதனையோடு துடித்த போது, பணியிலிருந்த செவிலியோ "படுக்கும் போது நல்லா இருந்துச்சா, இப்ப அழு" என்று மலையாளத்தில் ஆபாசமாக வேறு பேசியிருக்கிறார்.

ஏற்கனவே பல சம்பவங்களால் கொதித்துப் போயிருந்த தொழிலாளிகள் சாந்த குமாரி சாவினால் கோபமுற்று மருந்துவமனைக்குள் புகுந்து பணியிலிருந்த பலரையும் நையப் புடைத்தனர். நிர்வாகம் பிரச்சினையை திசை திருப்ப முயன்ற போது, அனைத்துத் தொழிற்சங்கங்களும் முன்வந்து, கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைத்து, சாந்த குமாரி மரணம் மருத்துவர்களின் கவனக் குறைவால் நேர்ந்தது என்று பிரேதப் பரிசோதனை நடத்திச் சான்றிதழும் வாங்கினார்கள். ஆயினும் இச்சங்கங்கள் சாந்த குமாரி இறந்த போது அணிந்திருந்த நகைகளை போலீசிடமிருந்து மீட்டுத் தர முன்வரவில்லை. இப்போது ஆதாயம் தேடி ஒதுங்கிக் கொண்டனர். நிர்வாகமோ 60 தொழிலாளிகள் மீது கொலை முயற்சி வழக்கு பதிந்துள்ளது.

பெண் தொழிலாளி மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து அர்ணாக்கல், டீப்டின், ஹில்லாஷ், தர்மாவேலி, மாட்டுப் பெட்டி ஆகிய டிவிஷன்களில் எல்லா தொழிலாளிகளும் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர்.

— பு.மா.இ.மு., வண்டிப் பெரியார்.

# எங்கே ஜனநாயகம்?

இரத்த வெறி பிடித்தலையும் நரபலி நாயகன் அத்வானியின் கோவை வருகையை எச்சரித்து ம.க.இ.க. தோழர்கள் கோவையில் சுவரொட்டி ஒட்டினர். அந்த சுவரொட்டிகளை தேடித் தேடிக் கிழித்த போலீசு, 5 தோழர்கள் மீது வழக்குப் பதிந்து, இராசேந்திரன், குலசேகரன், ஏகலைவன் ஆகிய மூவரைக் கைது செய்து சிறையிலடைத்து, பிணையிலும் வெளிவிட மறுக்கிறது. இந்திய நாட்டு ஜனநாயக உரிமையின் யோக்கியதை புழுத்து நாறுகிறது.

இரத யாத்திரை நடத்தி, நாடு முழுவதும், அப்பாவி முஸ்லிம்களை நரவேட்டையாடி, ரத்த ஆறு ஓடவிட்ட அத்வானியை எதிர்த்து சுவரொட்டி ஒட்டும் உரிமை கூட இல்லையாம். இரவில் திருட வந்தனைப் பிடிக்க 'திருடன், திருடன்' எனக் கத்தினால், மக்களின் நிம்மதியைக் கலைத்தான் எனக் கைது செய்வது எத்தகைய நியாயமோ, அந்த நியாயம்தான் அத்வானியை எதிர்த்த இந்த சுவரொட்டி வழக்கிலும் உள்ளது.

இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, தினத்தந்தி, தினகரன், தினமலர், மாலை முரசு என எல்லா நாளிதழ்களுமே போலீசு செய்தியை அப்படியே வாந்தி எடுத்து, தமது பார்ப்பனீய மதவெறி அடிவருடித் தனத்தை வெளிச்சமிட்டுக் கொண்டன.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கையைப் பறித்தது தமிழக அரசு உயிரைப் பறித்தது கள்ளச் சாராயம்

கள்ளச் சாராயம் காய்ச்சி, விற்குமிடங்களைப் பற்றி மக்கள் அரசுக்குத் தெரியப்படுத்தினால், உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளார். போலீசுக்குத் தெரிந்து, போலீசு உதவியுடன் தான் கள்ளச் சாராயமே காய்ச்சப்படுகிறது. ஏற்கனவே கள்ளச்சாராயம் பற்றி தெரிவித்தவைகள் மீது நடவடிக்கை எடுத்து முடித்துவிட்டு, அடுத்து எந்த இடம் என போலீசு தோள்தட்டி நிற்பதைப் போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகிறார் முதல்வர்.

திருவள்ளூர் அருகிலுள்ள புட்லூர் கிராம விசச் சாராயச் சாவுகளுக்கு என்ன காரணம்? யார் காரணம்? இதைப் பற்றி பத்திரிக்கைகள் பரபரப்பாக செய்தி வெளியிட்டார்களே த்விர உண்மைக் குற்றவாளிகளை அடையாளம் காட்டவில்லை.

விசச் சாராயம் குடித்து இறந்த 12 பேருமே தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த உழைப்பாளிகள். செவ்வாய்ப்பேட்டை, தொழுவூர், திருவூர், காக்களூர், ராமாபுரம், அரண்வாயல், தண்ணீர்குளம் ஆகிய கள்ளச்சாராயம் கொடி கட்டிப் பறக்கும் சாம்ராஜ்யங்களுக்கு மத்தியில் புட்லூர் கிராமமும் ஒரு சாம்ராஜ்யமாக மாறியது சமீபத்தில்தான்.

புட்லூர் கிராமத்தை ஒட்டிய 'காக்களூர் சிட்கோ தொழிற்பேட்டை'யில் சுமார் 300 தொழிற்சாலைகள் உள்ளன. வெளியூர் தொழிலாளர்கள் என்றால்தான் பயந்து வேலை செய்வார்கள் என்று உள்ளூர் ஆட்களை இங்கு வேலைக்குச் சேர்ப்பதில்லை. புட்லூர் அருகே இருந்த தமிழக அரசின் தென்னை மரப் பண்ணையில் 200 பேருக்கு தினசரி வேலை இருந்தது. புதிய விவசாயக் கொள்கையால் தென்னை மரப் பண்ணை மூடப்பட்டு, அந்த வேலையும் பறிபோனது. கடந்த ஜெயலலிதா ஆட்சியில் எஞ்சிய விவசாய நிலங்களும் 'ரியல் எஸ்டேட்' வியாபாரமாக மாறி, இருந்து வந்த விவசாய வேலையும் ஒழிந்தது. புட்லூர் பஞ்சாயத்துத் தலைவர் கூறுவது போல, சிறு தொழில் செய்ய வங்கிக் கடனும் மறுக்கப்பட்ட நிலையில் இக்கிராம மக்களுக்கு கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒன்றே தொழிலாகப் போனது. இவ்வூர் மக்களில் 70% பேர் தாழ்த்தப்பட்ட சாதியினர்.

மறுபுறம், ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் சாராய வியாபாரிகளுக்குமிடையிலுமான கூட்டணி, கள்ளச் சாராயம் குறுகிய காலத்தில் கொடிகட்டிப் பறக்கக் காரணமானது. 12 பேர் சாவுக்குக் காரணமான விசச் சாராயம் விற்ற குண்டு ஜெயராமன் அதிமுக வளர்ப்பு. இவனுக்குப் போட்டியாக இருந்த செல்வம் திமுக புள்ளி. சாராய சாவுக்குப் பின் செல்வத்தையும் கைது செய்ய போலீசு சென்ற போது, ஆளும் கட்சித் திமிரில் போலீசை அடிக்கவும் முயன்றவன் இவன். கள்ளச் சாராயம் பற்றி அறிக்கை விடும் அதிமுக - திமுகவின் யோக்கியதை இவ்வளவுதான்.

சாராயச் சாவுக்குப் பின் புட்லூர் கிராம இளைஞர்கள் ஒன்று திரண்டு, சாராய ஊறல்களை அழிக்கத் தொடங்கினர். வை. பால சுந்தரத்தின் அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் பகுதிப் பொறுப்பாளர் சுகுமார், ''எங்கள் பகுதியில் சாராய ஊறல்களை உடைக்க எவனையும் அனுமதிக்க மாட்டேன்'' என்று இளைஞர்களின் நற்பணிக்கு முட்டுக்கட்டை போட்டு, தான் யாருடைய கையாள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டார்.

விசச் சாராயம் தயாரிக்க 'மெத்தனால்' என்ற இரசாயனப் பொருள் 'பிஸ்ச்சர் இனார்கானிக்ஸ் அண்டு அரோமாடிக்' நிறுவனத்திலிருந்து கடத்தப்பட்டுள்ளது. இந்த ஆலை முதலாளியும் சாராய சாவுக்கு ஒரு காரணம்.

நிலங்களைப் பறித்து தொழிற்பேட்டை அமைத்து உள்ளூர் ஆட்களுக்கு வேலை மறுத்து, மீதி நிலத்தை ரியல் எஸ்டேட் டாக்கி, இருந்த விவசாய வேலையையும் ஒழித்து, பெரும்பான்மை தாழ்த்தப்பட்ட மக்களை வேலையற்றவர்களாக்கிய இந்த அரசும், ஓட்டுப் பொறுக்கிகளும் முதலாளிகளும்தான் கள்ளச் சாராயத்திற்கும் சாவுகளுக்கும் காரணம்.

மூடப்பட்ட அரசு தென்னைமரப் பண்ணை நிலத்தைக் கைப்பற்றி கூலி ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதும், தொழிற்பேட்டைக்கு நிலத்தைப் பறிகொடுத்த குடும்பங்களுக்கு ஆலைகளில் வேலை உத்தரவாதம் பெறுவதும்தான் இப்பகுதி மக்களுக்கு விடிவு என புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, மேற்கண்ட செய்திகளைத் திரட்டி, கூடவே மக்களிடையே பிரச்சாரமும் செய்தது. தஞ்சை பெரிய கோவில் விபத்தில் இறந்த பக்த கோடிகளுக்கு தலா ஒரு இலட்ச ரூபாய் கொடுத்த கருணாநிதி, இங்கு கூலி உழைப்பாளர்களுக்கு வெறும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து கை கழுவியதையும் அம்பலப்படுத்தியுள்ளனர்.

புட்லூரில் கள்ளச் சாராயத்திற்குப் பலியான பெண்.



தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான் என்பதைப் போல கள்ளச் சாராயம் எங்கெங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. ஓட்டுப் பொறுக்கிக் கட்சித் தலைவர்கள், போலீசு கூட்டில் இக் கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

புட்லூர் கிராம இளைஞர்கள் இன்று தன்னெழுச்சியாக சாராய ஊறல்களை நொறுக்கியிருக்கலாம். இந்த ஓட்டுப் பொறுக்கிகள் — போலீசு — அதிகாரிகள் என்ற இந்த சமூக விரோத கும்பல்களை ஒழித்துக் கட்டாதவரை கள்ளச் சாராயமும் ஓயப் போவதில்லை.

— பு.ஜ.தொ.மு.,
சென்னை.

www.padippakam.com


# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## நாட்டை மொட்டையடிக்கும் தனியார் மயம்

நமது நாட்டிலுள்ள விமான நிலையங்களிலேயே அதிக இலாபத்துடன் இயங்கி வரும் சென்னை, மும்பை, தில்லி, கல்கத்தா, பெங்களூர் விமான நிலையங்களைத் தனியாருக்குத் தாரை வார்த்துவிடப் போவதாக அறிவித்திருக்கிறது, பா.ஜ.க. அரசு. இந்த ஐந்து விமான நிலையங்களின் மூலம், மைய அரசுக்குக் கிடைத்து வந்த 300 கோடி ரூபாய் இலாபத்தை, இனி தனியார் முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் உடம்பு நோகாமல் பங்கு போட்டுக் கொள்ளப் போகிறார்கள். அதே சமயம், இந்த ஐந்து விமான நிலையங்களைத் தனியார்மயமாக்குவதால், நமது நாட்டிலுள்ள விமான நிலையங்களை நிர்வகித்து வரும் இந்திய விமான நிலைய ஆணையம், இனி வருடமொன்றுக்கு 130 கோடி ரூபாய் நட்டமடையப் போகிறது. இந்த அபகரிப்பின் மறுபெயர் தான் தனியார்மயம் - தாராளமயம்!

## மற்றுமொரு விசாரணைக் கமிசன் மற்றுமொரு மோசடித் தீர்ப்பு

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, மகாராஷ்டிர மாநிலத்தின் முதல்வராக இருந்த சரத் பவாரிடம், தங்களை மலைச் சாதியினராக அறிவிக்க வேண்டும் எனக் கோரி மனு கொடுக்க வந்த ''கோவாரி'' பழங்குடி இன மக்களின் மீது போலீசு நடத்திய தடியடியில், கிட்டதட்ட 200 கோவாரிகள் கூட்ட நெரிசலில் சிக்கி, குரல் வளை உடைந்து, மூச்சுத் திணறி நடுத்தெருவிலேயே மாண்டு போனார்கள். இந்த மனிதப் படுகொலையை விசாரித்த எஸ். எஸ். தானி விசாரணைக் கமிசன், 200 கோவாரிகள் இறந்து போனதற்கு போலீசின் தடியடி காரணமல்ல, அரசிடம் மனு கொடுப்பதற்கு அவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஊர்வலமாக வந்ததுதான் காரணம் எனத் தீர்ப்பளித்துவிட்டது. போலீசை மட்டுமல்ல, இம்மனிதப் படுகொலைக்கு தார்மீகப் பொறுப்பேற்க வேண்டிய சரத்பவாரையும் நிரபராதி என அறிவித்து விட்டது.



போலீசு நடத்திய தடியடியால், நெரிசலில் சிக்குண்டு இறந்து போன கோவாரி பழங்குடியினர்.

## தெய்வத்தின் பெயரால் விபச்சாரம்

கர்நாடக மாநிலத்திலுள்ள ரெய்ச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டஹல் கிராமத்தில் கடந்த சனவரி மாத இறுதியில், கிட்டதட்ட 100 பெண்கள் தேவதாசிகளாக்கப்பட்டனர். மேல்சாதி வெறியர்களும், இந்து மதப் பழமைவாதிகளும் தேவதாசி சடங்கு என்ற பெயரில் அந்தப் பெண்களை நிர்வாணப்படுத்தி, தொண்டஹல் கிராமத்தைச் சுற்றி ஊர்வலமாக அழைத்து வந்து, அப்பெண்களைத் தேவதாசிகளாக்கி விபச்சாரச் சந்தையில் தள்ளி விட்டனர். கர்நாடக மாநில ஜனதா தள அரசு தேவதாசி சடங்கு நடத்துவதற்குத் தடை விதித்திருந்த போதும், தடையை மீறி நடந்த இப்பார்ப்பனீய காட்டுமிராண்டித்தனத்தைத் தடுக்கவோ, சடங்குகளை நடத்தியவர்களைக் கைது செய்யவோ முன்வரவில்லை.

## அரசு செலவில் நடந்த பார்ப்பன வேள்வி

சனவரி மாத இறுதியில், நெய்வேலி நகரில் 60 இலட்ச ரூபாய் செலவு செய்து ''மகாயக்ஞம்'' என்ற பெயரில் வேள்வியொன்றினை நடத்தியது பார்ப்பனக் கும்பல். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த பார்ப்பன மேல்சாதி அதிகாரிகள், இந்த வேள்வியினை நடத்திய குழுவில் பொறுப்பு எடுத்துக் கொண்டதோடு, நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான பணத்தையும் வேள்வியை நடத்துவதற்கு எடுத்துக் கொடுத்து விரயமாக்கினர். மூட நம்பிக்கையை வளர்ப்பதற்கும், பார்ப்பனக் கும்பல் சுரண்டிக் கொழுப்பதற்குமாகவே நடத்தப்பட்ட இந்த வேள்வியையும், வேள்வியை நடத்துவதற்கு மக்களின் பணம் விரயமாக்கப்பட்டதையும் அம்பலப்படுத்தி நடைபெற இருந்த ஊர்வலத்திற்கு 'சூத்திர' கருணாநிதி அரசு தடை விதித்ததோடு, எவ்வித இடையூறும் இன்றி பதினோரு நாளும் யாகம் நடைபெறுவதற்கு போலீசு பாதுகாப்பும் அளித்தது; தடையை மீறி ஊர்வலமாகச் செல்ல முயன்ற 160 திராவிடர் கழகத் தொண்டர்களையும் சிறையில் தள்ளிவிட்டது.

## ''தனியார்'' குடிநீர் வடிகால் வாரியம்

திருப்பூர் நகருக்கு குடிநீர் வழங்கும் பணியைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் தாரை வார்த்துவிட்ட தி.மு.க. அரசு, திருச்சி நகருக்கு குடிநீர் வழங்கி கொள்ளையடிக்கும் உரிமையை ''சிறீராம் இன்ஜினீயரிங்'' என்ற தனியார் நிறுவனத்திற்குத் தூக்கிக் கொடுத்து விட்டது. திருச்சியையடுத்து, தமிழகத்தைச் சேர்ந்த 69 நகரங்களின் குடிநீர் வழங்கும் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைத்துவிடத் திட்டங்கள் தயாராகி வருகின்றன. குப்பை வாருவது, குடிநீர் வழங்குவது என மக்களுக்கு செய்துதர வேண்டிய வசதிகளைத் தனியாரிடம் தாரை வார்த்த பின்பு, மாநகராட்சி, நகராட்சி என்ற பெயர்ப் பலகைகள் மட்டும் எதற்கு?

## தொடரும் தீண்டாமை

கடலூர் மாவட்டம் - சிறீமுஷ்ணம் நகருக்கு அருகிலுள்ள நாகம்பந்தல் எனும் கிராமத்தில் உள்ள குளத்தை, தாழ்த்தப்பட்டோர் குளிப்பதற்கோ / குடிப்பதற்கு பயன்படுத்தக் கூடாது என மேல்சாதி வெறியர்கள் தடை போட்டு தீண்டாமையைக் கடைப்பிடித்து வருகின்றனர். அக்கிராமத்தைச் சேர்ந்த சேட்டு என்ற தாழ்த்தப்பட்டவர், மேல்சாதிவெறியர்களின் தடையை மீறி அக்குளத்தில் குளித்துவிட, மேல்சாதி வெறியர்கள் அவரைக் கட்டி வைத்துத் தாக்கியதோடு, மண்ணெண்ணெயை ஊற்றி, உயிரோடு கொளுத்திக் கொலை செய்துவிடவும் முயன்றனர்; அக்கிராமத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர், மேல்சாதி வெறியர்களின் கொலை வெறியாட்டத்தைத் தடுத்து விட்டாலும், சேட்டு மீது திருட்டுப் பட்டம் கட்டிச் சிறைக்கு அனுப்பி விட்டனர். இத்தீண்டாமையையும், கொலை வெறித் தாக்குதலையும் அம்பலப்படுத்திய இ.பொ.க. (மா-லெ) (லிபரேசன்) கட்சியின் மாநிலச் செயலர் பாலசுந்தரத்தின் குடும்பத்தினரையும் மேல்சாதி வெறியர்கள் விட்டு வைக்கவில்லை. இத்துணை நடந்த பின்னும் தமிழக போலீசு மேல்சாதி வெறியர்களுக்கு அனுசரணையாகதான் நடந்து வருகிறது.

## ஆந்திர மாநிலத்தை ஆள்வது யார்?

ஆந்திர மாநில அரசு, உலக வங்கியிடமிருந்து 2,200 கோடி



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

ரூபாய் கடன் வாங்குவதற்காக, ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் உலக வங்கி இரண்டு கட்டளைகளை இட்டுள்ளது. ஒன்று, ''வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வோர்'' எனும் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகள் பெற்றவர்களுள் 30 சதவீதத்தினரை அத்திட்டத்தில் இருந்து கழற்றி விட்டுவிட வேண்டும். இனி வரும் ஒவ்வொரு ஆண்டும், அரசுத் துறைகளில் வேலை பார்த்து வரும் ஊழியர்களுள், 1.9 சதவீத ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புவதைத் தவறாது நடைமுறைப்படுத்த வேண்டும்.



திருப்பூர் நகருக்குக் குடிநீர் வழங்க அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தமிடும் கருணாநிதி.


## இந்துமதவெறியர்களின் மிரட்டல்

முசுலீம்கள் தியாகத் திருநாள் எனக் குறிப்பிடும் பக்ரீத் பண்டிகை மார்ச் 29-இல் வருகிறது. இப்பண்டிகை நாளன்று முசுலீம் மதத்தினர், ஆடுகளைப் பலியிடுவது வழக்கம். இந்த ஆண்டு பக்ரீத் பண்டிகை நாளன்றே, ஜெயின் மத குருமார்களுள் ஒருவரான மகாவீரரின் பிறந்த நாளும் (மகாவீர் ஜெயந்தி) வருகிறது. மகாவீரரின் பிறந்த நாளை ''அகிம்சை நாளாக'' வடமாநில அரசுகள் அறிவித்துள்ளதைச் சாக்காக வைத்துக் கொண்டு, இந்துமத வெறி அமைப்புகள், பக்ரீத் பண்டிகையன்று முசுலீம்கள் ஆடுகளைப் பலியிடக் கூடாது என்று மிரட்டத் தொடங்கிவிட்டன. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதைதான்!

## உச்ச நீதி மன்றத்தின் அநீதி

மத்தியப் பிரதேச மாநிலத்தில், நர்மதா நதியின் குறுக்கே கட்டப்பட்டு வரும் அணைக்கு, அம்மாநிலத்தின் பழங்குடி மக்களை அகதிகளாக்கிய 'பெருமை'யுண்டு. இந்த அணையின் உயரம் உயர, உயர, அந்நதியின் கரையோரம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பழங்குடி இன மக்களின் பூமியெல்லாம் நீருக்குள் மூழ்கிப் போயின. அணையின் உயரத்தை இனியும் உயர்த்தக் கூடாது எனக் கோரிப் போராடி வரும் மத்தியப் பிரதேச மாநில பழங்குடி இன மக்கள், உச்சநீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்திருந்தனர். உச்சநீதி மன்றம், ''நர்மதா அணையின் உயரத்தை 80.3 மீட்டரிலிருந்து 85 மீட்டராக உயர்த்திக் கொள்ளலாம்'' எனத் தீர்ப்பெழுதி, நம்பிய மக்களின் முதுகில் குத்திவிட்டது.

நர்மதா அணைக்கட்டுத் திட்டத்தால் சொந்த நாட்டிலேயே அகதிகளான மலைவாழ் மக்கள்.



## இட ஒதுக்கீட்டுக்கு வேட்டு

ஆந்திர மாநில அரசும், இந்தியத் தரகு முதலாளிகளும் இணைந்து ஹைதராபாத் நகரில் அமைத்து வரும் உயர் தகவல் தொழில் நுட்ப பயிற்சிக் கூடங்களில், தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு அளிக்க முடியாது என அந்நிறுவனங்கள் கூறிவிட்டன. பார்ப்பன - பனியா தரகு முதலாளிகள், ''இப்பயிற்சிக் கூடங்களில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என ஆந்திர அரசு நிபந்தனை விதித்தால், நாங்கள் பங்குதாரர்களாக இருக்க முடியாது'' என நிபந்தனை விதித்ததை, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏற்றுக் கொண்டு, இட ஒதுக்கீட்டை ஓரங்கட்டி விட்டார். தாராளமயம் - தனியார்மயத்தின் முன் ஓட்டுக் கட்சிகளின் 'சமூக நீதி' செல்லாக்காசாகி விட்டது!

## இந்து மதவெறியர்களின் கிரிமினல் அரசியல்

கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நாராயண் ரானே என்ற கிரிமினல் பேர் வழியை மகாராஷ்டிரா மாநில முதல்வர் ஆக்கியதன் மூலம், அரசியலை கிரிமினல்மயமாக்கும் போட்டா போட்டியில், இந்து மதவெறியர்கள் மற்ற ஓட்டுக் கட்சிகளை ஓரங்கட்டி விட்டனர். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு மும்பையில், இளைஞர் காங்கிரசு தலைவரான சிறீதர் நாயக்கை பொது நிகழ்ச்சியொன்றில் சுட்டுக் கொன்ற வழக்கில் சிக்கிய 11 குற்றவாளிகளுள் மகாராஷ்டிரா முதல்வர் நாராயண் ரானேயும் ஒருவர். குற்றவியல் நீதிமன்றம், நேரடி சாட்சியம் இல்லை எனக் கூறி, நாராயண் ரானேயை வழக்கில் இருந்து விடுதலை செய்துவிட்டாலும், மும்பை உயர்நீதி மன்றம் இக்கொலை வழக்கை மறுவிசாரணை செய்யவுள்ளது. இந்து மதவெறியர்கள் பொது வாழ்வில் திணிக்கும் ஒழுக்கத்தின் இலட்சணம் இதுதான்!

## சி.பி.ஐ.-இன் யோக்கியதை

நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் நடந்த உர இறக்குமதி ஊழலின் மூளையாகச் செயல்பட்டவன் ராவின் மகன் பிரபாகர் ராவ் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால், இந்த ஊழல் வழக்கை விசாரித்த மையப் புலனாய்வுக் கழகம், இம்மோசடிக்கும், பிரபாகர் ராவிற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை எனக் கூறிவிட்டது. இதே போல, மகாராஷ்டிராவில் நடந்த 1000 கோடி ரூபாய் பெறுமான கூட்டுறவு காலனி ஊழல் வழக்கின் பிரதான குற்றவாளியான ''எம்.எஸ். ஷூஸ்'' என்ற நிறுவனத்தின் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளையும், இந்த ஊழலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளின் மீதான ஊழல் வழக்குகளையும் மையப் புலனாய்வுக் கழகம் குப்பைக் கூடையில் வீசிவிட்டது. உண்மை இப்படியிருக்க, பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் மையப் புலனாய்வுக் கழகத்தை சகட்டு மேனிக்குப் புகழ்ந்து தள்ளுவது அயோக்கியத்தனமானதில்லையா?



படிப்பகம்

www.padippakam.com



## அகாலி குழுச் சண்டையும் மதவாத சக்திகளின் மிரட்டலும்

பஞ்சாபில் ஆளும் அகாலிதளக் கட்சிக்குள் நடக்கும் குழுச் சண்டைகளின் விளைவாக, அக்கட்சியே பிளவுபடும் நிலையில் உள்ளது. இதனால் மத்திய அரசுக்குக் கிடைத்துவரும் எண்ணிக்கை ஆதரவு குறைந்து நெருக்கடி ஏற்படுமோ என்று பாரதீய ஜனதா பீதியடைந்துள்ளது.

பஞ்சாபை ஆளும் சிரோமணி அகாலிதள (பாதல்) கட்சியில் முதல்வர் பாதலுக்கும், மூத்த தலைவரும் சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவருமான தோராவுக்குமிடையே குழுச் சண்டைகள் கடந்த ஆண்டிலிருந்தே முற்றி வருகின்றன. இந்நிலையில் ஆதாம்பூர் இடைத் தேர்தலில் ஆளும் ஆகாலி தளம் தோல்வியடைந்ததும், முதல்வர் பாதல் வேறு யாரையாவது அப்பதவியில் நியமித்துவிட்டு கட்சி வேலைகளைப் பார்க்கட்டும் என்று தோரா சாடினார். இதைக் கண்டித்து பாதல் குழுவினர் தோராவைச் சாடி பத்திரிக்கைகளில் அறிக்கை வெளியிட்டு எதிர்ச் சாடலை நடத்தினர். இதனால் ஆத்திரமடைந்த தோரா, தனக்கு விசுவாசமான அமைச்சர்களை பதவி விலகல் கடிதம் கொடுக்கச் சொல்லி பாதலுக்கு நெருக்கடி கொடுத்தார். இதன் மூலம் பாதல் தன்னிடம் சமரசத்துக்கு வருவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் பாதல், விலகல் கடிதம் கொடுத்த 5 அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்குவதாக உடனடியாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து தோராவுக்கு ஆதரவாக அகாலிதள பொதுச் செயலாளரான பிரேம்சிங் சந்துமஜ்ரா பதவி விலகி நெருக்கடி கொடுத்தார்.



நொறுங்கிய கனவு: குழுச் சண்டைக்கு முன்பு, பஞ்சாபில் ஆட்சியைப் பிடித்த மகிழ்ச்சியில் பாதலும் (இடது) தோராவும் (நடுவில்) தமது கூட்டாளிகளுடன்.

நிலைமை விபரீதமாவதை அறிந்த பாதல், குருத்துவாரா கமிட்டியை விலைபேசி தனக்கு ஆதரவாக இழுத்தார். அதன் 15 செயற்குழு உறுப்பினர்களில் 10 பேர் பாதலுக்கு ஆதரவாக நின்றனர். இதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் குருத்துவாரா கமிட்டிகளை தனக்கு ஆதரவாக பாதல் திரட்டிக் கொண்டார். அகாலிதள ஒழுங்கு நடவடிக்கைக் குழு மூலம் தோராவுக்கு எச்சரிக்கை விடுத்து, அவரது செயலுக்கு விளக்கம் தரக் கோரினார்.

தோரா, அடுத்த கட்டமாக சீக்கிய உயர்மட்ட மத பீடமான அகால்தக்த்-இன் ஆதரவை நாடினார். அதன் தலைமை குருவான பாய் ரஞ்சித்சிங், தோராவின் ஆதரவாளராவார். அவர் இருதரப்பையும் சமரசமாகப் போகுமாறும், தோராவுக்கு அனுப்பிய விளக்கம் கோரும் நோட்டீசைத் திரும்பப் பெறுமாறும் பாதலுக்கு கூறினார். ஆனால் பாதல் குழுவோ இதை ஏற்க மறுத்து, இப்படி மதக் கட்டளை போடுவது சீக்கிய விரோதச் செயல் என்று சாடியது. குருத்துவாரா கமிட்டியின் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு ரஞ்சித் சிங்கை தற்காலிக நீக்கம் செய்த பாதல், பூரண்சிங் என்பவரை மதபீடத் தலைவராக நியமித்தார். இதனால் ஆத்திரமடைந்த ரஞ்சித்சிங் மதவிவகாரத்தில் தலையிட பாதலுக்கு உரிமை யில்லை; அவர் அரசாங்கப் பணிகளைச் செய்யக்கூட தகுதியற்றவர் என்று சாடுகிறார். மேலும், அனந்தபூர் சாகிப் தீர்மானத்தின்படி தனி சீக்கிய நாடு, தனி சீக்கியமதச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றப் போராட வேண்டும்; வரும் ஏப்ரலில் நடைபெற உள்ள, சீக்கிய தலைமைப் பீடம் உருவான 300-வது ஆண்டு விழாவில் இக்கோரிக்கையை நிறைவேற்றா விட்டால் 1978-இல் இரத்த வெள்ளத்தில் மூழ்கிய பைசாகி விழாவைப் போன்ற நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ளார். இதைக் காட்டி மீண்டும் பஞ்சாபில் மதவெறி பயங்கரவாத சக்திகள் தலை தூக்குவதாக 'தேசிய'ப் பத்திரிகைகள் பீதியூட்டுகின்றன.

அகால் தக்த் என்ற மதத் தலைமைப் பீடம், அதன் கீழே அரசியல் - சமூகப் பிரச்சினைகளுக்கு வழிகாட்ட சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டி, இவற்றுடன் ஒன்று கலந்துள்ள அகாலி அரசியல் கட்சிகள் என்கிற முறையில் மதமும் அரசியலும் பஞ்சாபில் பின்னிப் பிணைந்துள்ளது. மாநில உரிமை, நதிநீர் பங்கீடு முதலான நியாயமான கோரிக்கைகளைக் கூட மத அடிப்படைவாத கோரிக்கைகளுடன் இணைத்ததன் விளைவாக முன்பு அங்கே போராட்டம் திசை விலகி மதவெறி பயங்கரவாதம் தலை விரித்தாடியது.

மதவெறி பயங்கரவாத சக்திகளிடமிருந்து முறித்துக் கொண்டு ஜனநாயகத்தில் ஊன்றி நிற்பதாக பாதலும் தோராவும் கூறினாலும், இருதரப்புமே அதிகாரச் சண்டையில் வெற்றிபெற மத அடிப்படை வாதிகளையே சார்ந்து நிற்கின்றனர். அரசியல் ஆதாயத்துக்காக மாநில உரிமை பற்றி வீரதீர சவடால் அடிக்கின்றனர். பஞ்சாபில் சீக்கிய மக்கள், மதத்தையும் அரசியலையும் பிரித்தெறியாதவரை ஆளும் வர்க்க அரசியல் பிழைப்பு வாதிகளின் மோசடிகளையும், மதவெறியர்களையும் தனிமைப்படுத்தி வீழ்த்திடவும் முடியாது.

## சிறுபான்மையினர் பற்றி கணக்கெடுப்பு: இட்லர் வழியில் இந்துவெறியர்கள்

குஜராத்தில் கிறித்துவ தேவாலயங்கள் மீது தாக்குதல், ஒரிசாவில் பாதிரியார் உயிருடன் எரிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து நாடெங்கும் கிறித்துவர்களுக்கு எதிரான தாக்குதல், அச்சுறுத்தல், தேவாலயங்கள் மீது கல்வீச்சு, கிறித்துவ பள்ளிகளின் கதவு - சன்னல்கள் உடைப்பு, மதப் பிரச்சாரகர்கள் மீது தாக்குதல் என இந்துவெறி குண்டர்கள் ஆங்காங்கே ரவுடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய ஆட்டூழியங்கள் போதாது என்று கிறித்துவர்களை நிரந்தர பீதியில் ஆழ்த்தும் வகையில் இப்போது தலைநகர் டெல்லியில் கிறித்துவர்களைப் பற்றிய கணக்கெடுப்பு சோதனையை போலீசார் நடத்தி வருகின்றனர். கிறித்துவர்களின் பெயர், முகவரி, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, எந்த தேவாலயத்துக்கு வழிபாட்டுக் கூட்டங்களுக்கு வருகின்றனர், கிறித்துவ மதத்தில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர், அப்பகுதியின் பாதிரியார் மற்றும் மதப் பிரச்சாரகரின் முகவரி முதலானவற்றை சேகரித்து வருகின்றனர்.

இந்துவெறி ஆட்சியாளர்களோ இது வெறும் ஆய்வுதான்; சிறுபான்மை மதத்தினரின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைதான் என்கின்றனர். ஆனால் கிறித்துவர்களோ, தங்களை இனங்கண்டு இந்துவெறியர்கள் எளிதில் தாக்குவதற்கான ஏற்பாடுதான் இது என்று அஞ்சுகின்றனர். ஏனெனில் மும்பை நகரில் இப்படி அடையாளம் காணும் நடவடிக்கைக்குப் பின்னர்தான், கலவரத்தின் போது முஸ்லிம்களைக் குறிவைத்து இந்துவெறியர்கள் கொலை வெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். அத்தகையதொரு தாக்குதல் தங்கள் மீது ஏவப்படுமோ என்று மீள முடியாத பீதியில் டெல்லியிலுள்ள கிறித்துவர்கள் பரிதவிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com




இதேபோல குஜராத் மாநிலத்திலும் கிறித்துவர், முஸ்லிம்களைப் பற்றிய கணக்கெடுப்பை அம்மாநிலப் போலீசு நடத்தி வருகிறது. சிறுபான்மையினரின் பெயர், முகவரி, குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரம், வேலை செய்யுமிடம், சொத்து விபரம், வாகனங்களின் விபரம், வெளிநாட்டுடன் தொடர்பு இருப்பின் அதன் விபரம், கிரிமினல் வழக்குகளில் சிக்கியுள்ளவரா? தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு உள்ளவரா? என 10 அம்சப் படிவத்துடன் இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. சிறுபான்மையினரின் உரிமைக்கும், இந்திய அரசியல் சட்டத்திற்கும் எதிரான இச்செயலை 'இடதுசாரி' கட்சிகள் கண்டித்துள்ள போதிலும், சிறுபான்மையினர் பாதுகாப்புக்காகச் செய்யப்படும் நடவடிக்கைதான் இது என்று ஆளும் இந்துவெறி மாநில அரசு பசப்பி வருகிறது.

நாஜி ஜெர்மனியில் சிறுபான்மை யூதர்களுக்கு எதிராக இத்தகைய கணக்கெடுப்பை நடத்திய ஆரிய - பாசிச வெறிபிடித்த இட்லர், பின்னர் யூதர்களை இனங்கண்டு நரவேட்டையாடினான். இட்லரின் வாரிசுகளான இந்துவெறியர்கள் இன்று அதே உத்தியுடன் சிறுபான்மையினரை வேட்டையாடக் கிளம்பி விட்டனர்.

## பழைய ஆடைகளைக் கொடுத்து பழங்குடியினரை இந்துவாக்கும் அயோக்கியத்தனம்

**கி**றித்துவ, முசுலீம் மத நிறுவனங்கள்தான் மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன; இந்துமத நிறுவனங்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று கூறிக் கொண்டே மதம் மாறிச் சென்றவர்களை அச்சுறுத்தியும் மிரட்டிப் பணிய வைத்தும் பொருளுதவிகளைச் செய்து நைச்சியமாகப் பேசியும் மீண்டும் இந்து மதத்தில் இணைக்கும் தூய்மைப் படுத்தும் நடவடிக்கையை இந்துவெறியர்கள் நீண்ட காலமாக நடத்தி வருகின்றனர்.



ஆசை காட்டி மோசடி : பழங்குடியினருக்குப் பாதபூஜை செய்து இந்துமதத்தில் இணைக்கும் அயோக்கியத்தனம்.

தாழ்த்தப் பட்டோரும் பழங்குடியினரும் இந்து மதத்தைச் சாராதவர்கள். நான்கு வர்ண இந்து சனாதன சாதிய அமைப்பு முறைக்குள்ளும் அவர்கள் கிடையாது. இந்து மதத்துக்கு வெளியே உள்ள, அம்மதத்தால் ஒடுக்கப்பட்டுவரும் அவர்ணவர்கள். ஆனாலும் தாழ்த்தப்பட்டோரையும், பழங்குடியின மக்களையும் இந்துக்கள்தான் என்று கணக்கு காட்டுவதற்காக அண்மையில் இந்து வெறியர்கள் அயோக்கியத்தனமான, கோமாளிக் கூத்து ஒன்றை நடத்தியுள்ளனர். இந்து மதவெறி குடை அமைப்புகளில் ஒன்றான அகில பாரத வனவாசி கல்யாண் ஆஸ்ரம் என்கிற அமைப்பு, மத்திய பிரதேசத்தில் உள்ள தின்தோலி மாவட்டத்தில் 2000 பழங்குடியினரை இந்து மதத்தில் இணைத்துள்ளது. 'தாய் மதத்திற்கு திரும்பும் நடவடிக்கை' என்று இந்து வெறியர்கள் பெருமையுடன் இதைக் குறிப்பிடுகின்றனர்.

பழங்குடியினர் கிராமங்களுக்கு கார்களில் கும்பலாக வந்திறங்கிய இவ்வமைப்பினர், பயன்படுத்தப்பட்ட பழைய ஆடைகளை சிறுவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தனர். பெரியவர்களுக்குப் பழைய போர்வைகளைக் கொடுத்தனர். பின்னர் அவர்களிடம் ஒரு உறுதிமொழிப் படிவத்தைக் காட்டி, ஒவ்வொரு குடும்பம் பற்றிய விபரங்களை அவர்களே எழுதி, அதில் குடும்பத் தலைவரின் இடது கை பெருவிரல் ரேகையைப் பதித்துக் கொண்டனர். அப்படிவத்தில், ''நான் சனாதன இந்து தர்மத்தை மிக உயர்ந்த மதமாக மதிக்கிறேன். அறியாமையால் நான் அல்லது எனது முன்னோர்கள் வேறு மதத்திற்கு மாறியிருந்தோம். இப்போது எமது உண்மையான தாய் மதத்துக்குத் திரும்புவதாக நானும் என் குடும்பமும் கடவுளின் பெயரால் உறுதியளிக்கிறோம்'' என்று எழுதப்பட்டிருந்தது. அப்படிவத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது கூட அறியாமையிலுள்ள அப்பழங்குடி மக்களுக்குத் தெரியாது. மேலும் பல கிராமங்களில் யாருமே மதம் மாறாத போதிலும் கூட, அவர்களிடமும் இப்படிவங்களில் கைசாற்று பெற்று, அவர்களை மீண்டும் இந்து மதத்தில் இணைத்து விட்டதாக இக்கோமாளிகள் கணக்கு காட்டினர். இம்மாவட்டத்தில் மொத்தம் 3000 பழங்குடியினர்தான் கிறித்துவ மதத்தில் இணைந்துள்ளனர். அவர்களால் இந்து மதத்துக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டு இந்துவெறியர்கள் இந்தக் கோமாளிக் கூத்தை நடத்தியுள்ளனர். கிறித்துவ தேவாலயம் உள்ள ஒவ்வொரு பழங்குடியின கிராமத்துக்கும் சென்று அவர்களை அச்சுறுத்தி இப்படிவங்களில் கைச்சாற்று பெற்றுவிட்டு, அவர்கள் சுயவிருப்பத்துடன் இந்து மதத்தில் இணைந்ததாக கதை கட்டினர்.

அச்சுறுத்தியும், அற்பமான பொருளுதவிகளைச் செய்து ஆசை காட்டியும் அறியாமையிலுள்ள பழங்குடியினரை ஏய்த்து, 'தாய் மதத்தில்' இணைத்து விட்டதாகக் கணக்கு காட்டும் இந்துவெறிக் கோமாளிகள், கிறித்துவ மதநிறுவனங்கள் பழங்குடியினருக்குப் பொருளுதவி செய்து மதமாற்றம் செய்வதாக குற்றம் சாட்டுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

## போலி கம்யூனிச சீனாவில் தனியுடைமை சட்டபூர்வமானது

**தோ**ழர் மாவோ மறைவுக்குப் பிறகு, சோசலிசப் பாதையைக் கைவிட்டு முதலாளித்துவப் பாதையில் சென்று சீரழிந்த சீனா, இப்போது மேலும் ஒருபடி முன்னேறி தனியார் முதலாளித்துவத்தைச் சட்டபூர்வமாகவே அங்கீகரிக்கத் தீர்மானித்துள்ளது. சீனாவின் தேசிய மக்களவை (நாடாளுமன்றம்) வரும் மார்ச் மாதத்தில் கூடும் போது நாட்டின் அரசியல் சட்டத்தில் இதற்கேற்ப முக்கிய மாற்றங்களைச் செய்யப் போவதாக அறிவித்துள்ளது. சோசலிச சந்தைப் பொருளாதாரம், சோசலிச ஜனநாயகக் கட்டுமானம் முதலான செல்லாடலுடன் மக்களவைத் தலைவர் லீ-பெங், தனியார் முதலாளித்துவத்தை நியாயப்படுத்தி வெளிப்படையாகவே பேசி வருகிறார்.

புதிய அரசியல் சட்டத்தின்படி, ''சீனா இன்று சோசலிச கட்டத்தின் ஆரம்ப நிலையில் உள்ளது'' என்ற அரசியல் சட்ட முகப்பு வாசகம் மாற்றப்படும். அதற்குப் பதிலாக ''சீனா சோசலிச சமுதாயத்தின் ஆரம்பக் கட்டத்தில் நீண்ட காலமாக நிலைத்திருக்கும்''



படிப்பகம்

என்ற வாசகம் அமைய உள்ளது.

சோசலிச சமுதாயத்தின் ஆரம்ப கட்டத்தில் பெருவீதத் தொழில்கள் மக்களுடமை ஆக்கப்படும்; சிறுவீதத் தொழில்களில் தனியுடைமை நீடிக்கும் அதே சமயம், விரைவில் அவை கூட்டுத் தொழில்களாக மாற்றப்படும் என்பது மார்க்சிய விதி. ஆனால் பெருவீதத் தொழில்களிலேயே தனியார்மயத்தையும் அன்னிய முதலீட்டையும் கொண்டு வந்துவிட்ட சீன போலி கம்யூனிச ஆட்சியாளர்கள், தாங்கள் சோசலிசத்துக்கான பாதையிலிருந்து விலகிவிடவில்லை என்று காட்டி ஏய்ப்பதற்காகவே இப்படி முகப்பு வாசகத்தை மாற்றியுள்ளனர். சோசலிசத்தின் ஆரம்பக் கட்டத்தில் சீன சமுதாயம் உள்ளதாகவும் எனவே தனியார் - அன்னிய மூலதனக் கொள்ளையும் இருக்கும் என்றும் இப்படி தமது முதலாளித்துவப் பாதையை நியாயப்படுத்துகின்றனர்.

உழைப்புக்கேற்ற விநியோகம் என்ற சோசலிச முறையை ஏற்பதாகவும் அதே சமயம், வேறுபட்ட (அதாவது முதலாளித்துவ) விநியோக முறைகளை சோதனை முறையில் அனுமதிப்பதாகவும் அரசியல் சட்டத்தின் 6-வது பிரிவில் திருத்தம் செய்ய உள்ளனர்.

''சோலிச சந்தைப் பொருளாதாரத்தில் தனியார் துறையும் சுய தொழில் துறையும் பிரிக்க முடியாத அங்கங்களாகும்; நாடு, தனியார் துறையின் சட்டபூர்வ உரிமையை மதித்து, வழிகாட்டி, அவற்றைப் பாதுகாக்கும்'' என்று அரசியல் சட்டத்தின் 11-வது பிரிவை மாற்ற உள்ளனர். அதே சமயம் சித்தாந்த ரீதியாக முதலாளித்துவத்தை ஏற்பட்டதில்லை என்று தமது மோசடியை மூடி மறைக்கின்றனர். சீனாவின் வழிகாட்டும் கோட்பாடாக மார்க்சியம் - லெனினியம் - மாசேதுங் சிந்தனை - டெங் கோட்பாடு ஆகியன தொடர்ந்து நீடிக்கும் என்றும் அறிவித்துள்ளனர்.

தனியார் முதலாளித்துவத்தையும் அன்னிய மூலதனத்தையும் திறந்துவிட்டு ''இது மண்ணுக்கேற்ற சோலிசம்'' என்று மாய்மாலம் செய்து வந்த சீன போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் இப்போது சட்டபூர்வமாகவே தனியார் முதலாளித்துவத்தை அங்கீகரித்து நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகின்றனர். இத்தனைக்குப் பிறகும் சீனா இன்னமும் சோசலிச நாடுதான் என்று இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் தமது அணிகளையும் மக்களையும் ஏய்த்து வருகின்றனர்.



## தமிழக போலீசு ரவுடிகளின் வெறியாட்டம் - சூறையாடல்

தேடுதல் வேட்டை என்ற பெயரில் காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் போலீசார் நடத்தி வரும் வெறியாட்டங்களையே விஞ்சும் வகையில் தமிழக போலீசு அண்மைக் காலமாக வெறிக் கூத்தாடி வருகிறது. குண்டுபட்டி, ஒகளூர் முதலான கிராமங்களில் போலீசு நடத்திய வெறியாட்டம் - சூறையாடல்களைப் போலவே அண்மையில் போலீசு ரவுடிகள் எம். வேலாங்குளம் கிராமத்தையே சூறையாடி நாசப்படுத்தியுள்ளனர்.

கடந்த சனவரி மாதம் 27-ந் தேதியன்று, சென்னையில் தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்ற மூவேந்தர் முன்னேற்றக் கழகம் எனும் தேவர் சாதிவெறி அமைப்பின் தலைவரான சேதுராமன் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, சிவகங்கை - இளையான்குடி சாலையில் அரசுப் பேருந்து ஒன்றை அச்சாதி அமைப்பினர் தீயிட்டுக் கொளுத்தினர். எம். வேலாங்குளம் கிராமத்தினர்தான் இதைச் செய்திருக்க வேண்டும் என்று தீர்மானித்த போலீசு, அக்கிராமத்தை 300-க்கும் மேற்பட்ட போலீசாருடன் முற்றுகையிட்டு நான்கு நாட்களாகச் சூறையாடியுள்ளது. போலீசு வருவதை அறிந்து தேவர் சாதியினர் மட்டுமே உள்ள அக்கிராமத்து ஆண்கள் அனைவரும் காட்டுக்குள் தலைமறைவாகி விட்டனர், யாருமே சிக்காத ஆத்திரத்தில் பூட்டியிருந்த வீடுகளின் கதவுகளை உடைத்து, உள்ளேயிருந்த பொருட்களை போலீசார் உடைத்தெறிந்தனர். பெண்களை ஆபாசமாகத் திட்டி, கையைப் பிடித்து இழுத்து வண்டியில் அடைத்து போலீசு நிலையத்துக்குக் கொண்டு சென்று மூன்று நாட்களாக தொடர்ந்து சித்திரவதை செய்தனர். பல பெண்களின் நகைகளைக் கழட்டிக் கொண்ட போலீசு அவற்றைத் திருப்பித் தரவில்லை. கிராமத்தின் விளை நிலங்களில் ஆடு - மாடுகளை அவிழ்த்து மேய விட்டதோடு, கால்நடைகளையும் களவாடிக் கொண்டனர். சரோஜா என்ற பெண்மணியின் வீட்டிலிருந்த நெல் மூட்டைகள் மீது அடுப்பெரிக்க வாங்கி வைத்திருந்த 10 லிட்டர் மண்ணெண்ணையை ஊற்றி நாசப்படுத்தினர். பல வீடுகளில் பெட்டி - பீரோக்களில் வைத்திருந்த பணம், நகைகளைக் களவாடிச் சென்றனர். பல பெண்கள் போலீசாரின் தடியடித் தாக்குதலால் எலும்பு முறிந்து போயுள்ளனர். வீட்டுக்கு வீடு சோகக் கதையைச் சொல்லுமளவுக்கு இந்தக் கிராமமே நிலைகுலைந்து போயுள்ளது.

பேருந்தை எரித்த சாதிவெறிக் குண்டர்களைக் கைது செய்து தண்டிப்பதைவிட்டு, கிராமத்தையே சூறையாடி அட்டூழியம் புரிய போலீசுக்கு என்ன உரிமை இருக்கிறது? அதுவும் பெண்களிடம் தமது சூரத்தனத்தைக் காட்டி கொட்டமடிக்க போலீசுக்கு என்ன அருகதை இருக்கிறது? இவற்றையெல்லாம் ''அவர்களே உருவாக்கிக் கொண்ட சோடிப்புகள்; காரியம் ஆக வேண்டுமானால் அவர்கள் எதையும் செய்வார்கள்'' என்று தமது ரவுடித் தனத்தை மூடிமறைத்து திமிராகப் பேசுகிறது போலீசு கும்பல். இவற்றை சாதிவெறியர்களுக்கு எதிரான நடவடிக்கையாகக் காட்டி போலீசாரின் அக்கிரமங்களை நியாயப்படுத்திவிட முடியாது. அவ்வாறு செய்வது குண்டுப்பட்டி, ஒகளூர், வேலாங்குளம் வரிசையில் நாளை இன்னுமொரு வெறியாட்டம் - சூறையாடலில் இறங்க போலீசு ரவுடிகளுக்குத் தாராள அனுமதி அளிப்பதாகி விடும்.

## ''அரசு மின்வாரியங்களுக்கு மூடுவிழா!'' — என்ரான் வருகையின் எதிர்விளைவு

மகாராஷ்டிராவிலுள்ள அமெரிக்க ஏகபோக மின் நிறுவனமான என்ரான், இம்மாதத்தில் முதல் கட்ட திட்டத்தை முடித்து 740 மெகா வாட் மின் உற்பத்தியைத் தொடங்க உள்ளது. இதன் விளைவாக, மகாராஷ்டிர அரசுத் துறை நிறுவனங்களான மாநில மின் வாரியங்கள் மூடுவிழாவை எதிர் நோக்கியுள்ளன.

ஆறாண்டுகளுக்கு முன்பு மகாராஷ்டிர மாநில அரசு தனியார் மின் திட்டங்களை வரவேற்றது. காங்கிரசு அரசும், பின்னர் பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டணி அரசும் அமெரிக்காவின் என்ரான் நிறுவனம் மின் நிலையம் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தன. மின்சாரப் பற்றாக் குறையை மாநில மின்வாரியங்களால் ஈடுசெய்ய முடியாததாலேயே இத்துறையில் தனியார் - அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பாக அப்போது காரணம் காட்டினர். ஆனால் கோடை காலத்தில் மட்டுமே 400 மெகாவாட் அளவுக்கு மின் பற்றாக்குறை இருந்தது. மாநில மின் வாரியங்களை விரிவுபடுத்தி சீரமைப்பதன் மூலம் இப்பற்றாக்குறையை ஈடு செய்ய வாய்ப்புகள் இருந்த போதிலும், தனியார்மய - தாராளமய மோகத்தில் ஆட்சியாளர்கள் என்ரான் நிறுவனத்துக்குக் கதவுகளை அகலத் திறந்து விட்டனர். இப்போது என்ரான் நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கிவிட்டால், தேவைக்கு அதிகமாக மின்சாரம் உபரியாகிவிடும். அதை என்ன செய்வது என்று




படிப்பகம்

www.padippakam.com



தெரியாமல் மாநில மின் வாரியங்களின் உற்பத்தியைக் குறைத்து, படிப்படியாக மூடிவிடும் திட்டத்தில் ஆட்சியாளர்கள் உள்ளனர். ஏனெனில் என்ரான் நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தை வாங்கியே ஆக வேண்டும்; அல்லது வாங்கா விட்டாலும் அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. என்ரான் நிறுவனத்தை உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளுமாறு உத்திரவிடவும் முடியாது. அதன் மின்சாரத்தை வாங்கியே ஆக வேண்டும்; இலாப உத்திரவாதம் தர வேண்டும் என்ற அடிப்படையிலேயே ஒப்பந்தம் உள்ளது.

மகாராஷ்டிர மின் வாரியத்தின் மின் உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 98 பைசாவாகும். என்ரானின் மின் உற்பத்திச் செலவு 2 ரூபாயாகும். இதற்கு மேலாக இலாபம் வைத்து மாநில மின் வாரியத்துக்கு என்ரான் விற்கும். இந்த நிலைக்கும் மேலாக இலாபம் வைத்து மின்சாரத்தை விநியோகித்தால்தான் மாநில மின் வாரியங்கள் இயங்கவே முடியும். ஆனால் டாடா, ரிலையன்ஸ், மித்தல், ஸ்பெக்டரம் என பல தனியார் மின் நிறுவனங்கள் போட்டியாக உள்ள நிலையில, மாநில மின் வாரியங்கள் விலையைக் குறைத்து நட்டத்துக்கு விற்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் நாளொன்றுக்கு ரூ. 1752 கோடி மாநில மின் வாரியங்களுக்கு நட்டம் ஏற்பட்டு மூட வேண்டியதாகிவிடும். மறுபுறம், அதிக அழுத்தம் கொண்ட மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஆலைகளும் தொழில் மந்தம் - நெருக்கடி காரணமாக உற்பத்தியைக் குறைத்து விட்டதால் மின் தேவையும் குறைந்துவிட்டது. இதனால் கோடை காலம் தவிர, இதர காலங்களில் தேவைக்கு அதிகமாகவே மின்சாரம் உபரியாக கிடைத்து வீணாக விரயமாகிறது. இந்நிலையின் என்ரானின் மின்சாரத்தையும் வாங்க வேண்டுமென்றால், அதை எந்த வழியிலும் பயன்படுத்த முடியாமல் போகும். ஆனாலும் அதற்கு கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதால், மாநில மின் வாரியங்கள் திவாலாகிப் போகும். என்ரானின் முதல் கட்ட மின் உற்பத்திக்கே இந்த கதி என்றால், இரண்டாவது கட்டத்தில் 2000 மெகாவாட் அளவுக்கு என்ரான் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் போது, நிலைமை என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.



தேர்தல் வெற்றிக்கான முன் தயாரிப்பு: சூரத்கல் நகரில் இந்து வெறியர்களின் கலவரத்தில் சூறையாடப்பட்ட முஸ்லிம் கடைகள், கிடங்குகள்.

தனியார் மயத்தால் போட்டி அதிகரிக்கும்; இதனால் உற்பத்திப் பொருட்களின் விலை மலிவாகி விடும்; நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்று மக்கள் விரோத ஆட்சியாளர்கள் கதையளந்தார்கள். ஆனால் அரசுத் துறையை திவாலாக்கி, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்து, தனியார் - அந்நிய நிறுவனங்களின் பகற்கொள்ளைதான் நடந்தேறியுள்ளது என்பதை என்ரான் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## தேர்தல் வரும் பின்னே மதக்கலவரம் வரும் முன்னே

மதக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு ஆட்சியைப் பிடிப்பது என்பது இந்துவெறியர்களின் தேர்தல் உத்தி. அயோத்தி, மும்பை, கோவை வரிசையில் இப்போது கர்நாடக மாநிலத்தின் சூரத்கல் நகரில் இந்துவெறியர்கள் மதக் கலவரத்தை நடத்தி 8 பேரின் உயிரைக் குடித்துள்ளனர். கர்நாடகத்தில் வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் தட்சிண கன்னட மாவட்டத்தில் வெற்றியை அறுவடை செய்யும் நோக்கத்தோடு திட்டமிட்டே இந்துவெறியர்களால் இக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கடந்த டிசம்பர் மாத இறுதியில், கல்லூரி மாணவனாகிய ஒரு முஸ்லிம் இளைஞன் அக்கல்லூரியில் பயிலும் ஒரு இந்து மாணவியை கேலி - கிண்டல் செய்ததையடுத்து, அப்பெண்ணின் உறவினர்கள் போலீசில் புகார் செய்ததோடு, அவனைத் தாக்கவும் செய்தனர். ஆனாலும் போலீசார் அந்த இளைஞனைக் கைது செய்து தண்டிக்கவில்லை என்று கூறி இந்துவெறியர்கள் சூரத்கல் நகரில் திடீர் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். பின்னர் போலீசார் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பிறகு இந்துவெறியர்கள் தற்காலிகமாகப் பின் வாங்கினர்.

இதே நேரத்தில் சூரத்கல் நகரை ஒட்டியுள்ள கிருஷ்ணப்பூரிலுள்ள மசூதியை இந்துவெறியர்கள் திடீரெனத் தாக்கி சேதப்படுத்தினர். இந்துவெறி குண்டர்களைக் கைது செய்யக் கோரி முஸ்லிம் அமைப்புகள் போராட்டம் நடத்தியதையடுத்து இரு பிரிவினருக்குமிடையே முறுகல் நிலை முற்றியது.

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு கலவரத்துக்கான தயாரிப்புகளில் இறங்கிய இந்துவெறியர்கள், வெளி மாவட்டங்களிலிருந்து குண்டர்களைக் கொண்டுவந்து கடந்த டிசம்பர் 29-ந் தேதியன்று நள்ளிரவில் சூரத்கல் ரயில் நிலையம் அருகே முஸ்லிம் கடைகள் மீது கல்வீச்சுத் தாக்குதலை நடத்தினர். தற்காப்புக்காக முஸ்லிம்கள் திருப்பித் தாக்கவும் மறுநாள் அது கலவரமாக உருவெடுத்தது. இந்துவெறி குண்டர்கள் முகத்தில் கைக்குட்டையைக் கட்டிக் கொண்டு முஸ்லிம் கடைகள் - வீடுகளைத் தாக்கி சூறையாடினர். இரும்புத்தடி, கத்திகளுடன் கும்பலாக வந்து இந்துவெறியர்கள் ஒவ்வொரு முஸ்லிம் வீட்டினுள்ளும் புகுந்து அனைவரையும் காட்டு மிராண்டித் தனமாகத் தாக்கியதோடு பொருட்களைக் களவாடிச் சென்றனர். சூரத்கல் நகரின் தொலைபேசித் தொடர்பு இந்துவெறியர்களால் திட்டமிட்டே சிதைக்கப்பட்டது.

டிசம்பர் 30 முதல் சனவரி 5-ந் தேதிவரை சூரத்கல் மற்றும் அதை ஒட்டியுள்ள கிருஷ்ணப்பூர், பைகம்பாடி, கனேஷ்பூர், சொக்கபேரு முதலான இடங்களில் இந்துவெறியர்கள் "ஜெய் பஜ்ராங்தள்" என்று கூச்சலிட்டுக் கொண்டே கொலை வெறியாட்டங்களிலும் சூறையாடலிலும் ஈடுபட்டனர். "முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இந்துக்களுக்குப் பாதுகாப்பில்லாமல் போய்விட்டது; முஸ்லிம்களுக்கு உரிய பாடம் புகட்ட வேண்டும்" என்று பாரதீய ஜனதா கட்சி வெளிப்படையாகவே இந்து வெறியைத் தூண்டிவிட்டது. இந்துவெறியர்களின் கொலை வெறித் தாக்குதலிலும் போலீசு துப்பாக்கிச் சூட்டிலும் 8 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பலர் கை, கால் எலும்பு முறிந்து பாடுகாயங்களுடன் மருத்துவமனைகளில் கிடக்கின்றனர். தலைமுறை தலைமுறையாக சூரத்கல்லில் வாழ்ந்த பல முஸ்லிம் குடும்பங்கள் உயிருக்கு அஞ்சி வெளியேறிவிட்டன.

சூரத்கல் நகரமே கலவரத்தால் பற்றி எரிந்த போதிலும் கர்நாடக ஜனதாதள அரசு கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கவே செய்தது. கலவரத் தீயால் சூரத்கல் கருகியபோது ஜனதாதள அமைச்சர்கள் டெல்லியில் பதவிச் சண்டையில் ஈடுபட்டிருந்தனர். தேர்தல் ஆதாயம் கருதி காங்கிரசுத் தலைவி சோனியா சூரத்கல்லுக்கு பார்வையிட வந்த பிறகுதான், மாநில முதல்வர் பட்டீல் அங்கு சென்று நீதி விசாரணைக்கு உத்திரவிட்டார். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்த தட்சிண கன்னட மாவட்டமும் இந்துவெறி கலவர மேகங்களால் சூழப்பட்டு, குருதி மழைக்குக் காத்திருப்பதையே நிலைமைகள் கட்டிக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# அகமலை கிராம மக்கள் வனத்துறையின் கொத்தடிமைகளா?

**அகமலை கிராமத்தில் வாழும் மலைவாழ் மக்கள் மீதும், பிறரின் மீதும் வனத்துறை அதிகார கும்பல் கட்டவிழ்த்துவிட்டு வரும் மனித உரிமை மீறல் அட்டூழியங்களையும், வனச் செல்வங்களை அக்கும்பல் கொள்ளையடித்து வருவதையும் தட்டிக் கேட்கத் தயாராகும் விவசாயிகள் விடுதலை முன்னணி!**

மலைவாழ் பழங்குடி மக்களை ஆசை காட்டி மோசம் செய்து கிறித்துவ மதத்திற்கு மாற்றுகிறார்கள் என்று குஜராத், ஒரிசா, மத்தியப்பிரதேசம் என பல மாநிலங்களில் கிறித்தவர்கள் தாக்கப்படுகிறார்கள்; வழிபாட்டுத் தலங்கள் தகர்க்கப்படுகின்றன; பெண்கள் பலாத்காரப் படுத்தப்படுவதும் மனிதர்கள் உயிரோடு கொளுத்தப்படுவதும் என பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகளின் கோரத் தாண்டவம் கட்டுப்பாடின்றி நடக்கிறது.

சிறுபான்மை மக்களின் பாதுகாவலனாக வேடங்கட்டி ஏய்க்கக் கிளம்பியுள்ளது காங்கிரசுக் கட்சி. இக்கட்சி மகாராட்டிரத்தில் ஆண்ட போதுதான் கோவாரி பழங்குடிகள் 200-க்கும் மேற்பட்டோர் போலீசு தாக்குதலில் நெரிபட்டே செத்தனர். அன்றைய முதல்வர் சரத்பவாரிடம் மனு கொடுக்க திரண்டு வந்ததுதான் அவர்களின் குற்றம்! மலைவாழ் மக்களின் நிலமும் உரிமைகளும் பஞ்சாய்ப் பறக்கின்றன. இந்தியாவை 21-ஆம் நூற்றாண்டுக்கு கொண்டு போகப் போவதாகப் பசப்புகிறது ஆளும் வர்க்கக் கும்பல். ஆனால் பழங்குடி மக்களோ வாழவும் வழியின்றி பரிதவிக்கின்றனர்.

**அகமலை: 'சொர்க்க மலையில்' பழங்குடிகளின் நரக வாழ்க்கை**

தேனி மாவட்டம், போடி வட்டாரத்திற்கு உட்பட்ட பஞ்சாயத்து அகமலை. மலை மீதுள்ள இதில் 21 குக்கிராமங்கள் உள்ளன. இங்கு பத்தாயிரம் மக்கள் வசிக்கின்றனர். இதில் பெரும்பான்மையினர் பழங்குடி மக்களான மண்ணாடியார்கள், பளியர்கள். செட்டியார், மறவர், கள்ளர் என மேலும் பல சாதியினரும் இன்று வசிக்கிறார்கள்.

திப்பு சுல்தான் காலத்திலேயே 4500 அடிக்கும் உயரமான இம்மலையில் குடியேறிய பழங்குடிகள், அட்டைகளுக்கும் கொடிய விலங்குகளுக்கும் மத்தியில், தமது இரத்தத்தையே வியர்வையாக்கி, கற்பாறைகளும் மேடு பள்ளமுமான இம்மலைப் பகுதியை பொன் விளையும் பூமியாக்கினர். இன்று நாற்பதாயிரம் ஏக்கர் நிலத்தில் ஏலம், மிளகு போன்ற காரப் பொருட்களும், காபி முதலிய பணப் பயிர்களும் விளைவதற்குக் காரணமே பழங்குடிகளான பளியர்களும், மண்ணாடியார்களும் தான்.

ஆனால் இன்றைக்கு பெரும்பாலான அப்பழங்குடிகளுக்கு நிலம் சொந்தமில்லை. இக்கிராமங்களுக்கு சாலைகளே கிடையாது. உயிர்காக்கும் மருத்துவமனையில்லை. அடிப்படை வசதிகளோ, சுகாதார வசதிகளோ அறவே கிடையாது. இம்மக்கள்படும் அவலத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது.

தேர்தல் நேரத்தில் ஓட்டுப் பொறுக்க மட்டுமே வருகின்ற அரசியல்வாதிகள் பிறகு இவர்களை நினைப்பதுகூட இல்லை. பிறகெங்கே இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது?

அகமலையில் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வரும் சொக்கையன் கூறுவது போல், ''சொந்த சொந்த நிலத்தில் மரமட்டைகளை ஒடித்தாலும் ''லஞ்சமாக'' ரூ. 5000, ரூ. 10,000 என பிடுங்கிச் செல்கின்றனர் (வனத்துறையினர்). இந்த மாதிரி லஞ்சம் கொடுப்பதற்கு எங்களுடைய பாத்திரம், பண்டம் எல்லாத்தையும் அடமானம் வைத்துதான் கொடுக்க வேண்டி உள்ளது.''

படிப்பறிவற்ற இந்த அப்பாவி மக்களை மிரட்டி பணம் பறிப்பது மட்டுமல்ல. அவர்களின் பெண்களையும் மிரட்டி பாலியல் வல்லுறவு கொள்வது வனத்துறைக் கயவாளிகளுக்குக் கைவந்த கலை. இது பற்றி சொக்கையன் மேலும் கூறுவது:

''இதற்கு எல்லாம் முக்கிய காரணமாக இருப்பவர்கள் வனத்துறையைச் சேர்ந்த ரேஞ்சர் பாரஸ்ட் சந்திரன், கார்டு மற்றும் வாட்சர்கள்தான். லஞ்சம் வாங்கியதை வெளியே சொன்னால் (கலெக்டர், உயரதிகாரிகளிடம்) கஞ்சா வளர்த்தாய், மான் முதலிய காட்டு மிருகங்களை வேட்டையாடினாய் என்று பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளிவிடுவோம் என்று மிரட்டுகின்றனர். பெண்களை வனத்துறையினர் பாலியல் பலாத்காரம் செய்கின்றனர்.'' ஏறக்குறைய வனத்துறையினர் இவர்களை கொத்தடிமைகளாக நடத்துகின்றனர்.

இக்கிராமங்களில் பேசிய போது எல்லோருமே கூறியது சாலை வசதியைப் பற்றித்தான். இங்குள்ள ஆரம்ப பள்ளிக் கூடத்தில் சமையல் ஆயாவாக (!?) 17 ஆண்டுகள் வேலை செய்து வரும் ராமலட்சுமி கூறும்போது ''இங்கு சரியான மருத்துவ வசதி கிடையாது. 'ஆசுபத்திரி' ஒன்று உள்ளது. ஆனால் எந்த நர்சும் இந்த ஆஸ்பத்திரி ஆரம்பித்த 7 வருடங்களில் சரியாக வந்ததில்லை.... உடல்நிலை சரியில்லை என்றால் இங்கிருந்து 'போலி' (தொட்டில் கட்டி தூக்கிச் செல்வது) கட்டிதான் தூக்கிச் செல்ல வேண்டும். இடையிலேயே இறந்து விடுபவர்களும் உண்டு. அவர்களை அங்கேயே புதைத்து விடுவோம். யாருக்காவது பிரசவ காலங்களில் இடுப்பு வலி என்றாலும் இந்த முறையில்தான் தூக்கிச் செல்வோம். இடையிலேயே பிரசவமான பெண்கள் நிறைய உள்ளனர். இதற்கெல்லாம் முக்கிய காரணமாக, பெரும் பிரச்சினையாக இருப்பது ரோடு வசதிதான்'' என்கிறார்.

ஊரணி, ஊத்து காடுவைச் சேர்ந்த 55 வயது குருசாமி என்பவர் பேசும்போது: ''பூர்

**அடிப்படை வசதிகள் ஏதுமற்ற அகமலை கிராமம். ஓட்டுப் பொறுக்குவதற்கு மட்டும் வந்து போகும் கட்சிகளுக்கு, ஊரில் கொடிக்கம்பம் எதற்கு?**






படிப்பகம்

www.padippakam.com

வீகமாக பாட்டன் காலத்திலிருந்து நிறையப் பேர் விவசாயம் செய்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு அரசாங்கம் பட்டா கொடுக்காமல் உள்ளது. எவ்வளவோ முயன்றும் கலெக்டர் உட்பட அதிகாரிகள் யாரும் கண்டு கொள்வதே இல்லை. பணம் கொடுத்தவர்களுக்கு மட்டும் முன்னாடி இருந்த ஒரு தாசில்தார் பட்டா போட்டுக் கொடுத்து விட்டு மீதி ஆட்களுக்கு பட்டா கொடுக்காமல் சென்றுவிட்டார். இங்கு சரியான தபால் வசதி கிடையாது. சரியான மருத்துவ வசதி கிடையாது... இதற்கெல்லாம் முக்கிய காரணம் இங்கு சரியான சாலை வசதி இல்லாததுதான். இதற்கு வனத்துறையினர்தான் முக்கிய காரணம். சாலை வசதி வந்துவிட்டால் இங்குள்ள மக்கள் படித்து முன்னேறி விடுவார்கள். அதனால் நாம் லஞ்சம் வாங்கிக் கொள்ளை அடிக்க முடியாது என்று சாலை வசதி வருவதைத் தடுத்துக் கொண்டு உள்ளனர்'' என்கிறார்.

இந்த குருசாமியை ரேஞ்சர் பாரஸ்ட் சந்திரன் பெரிகுளம் கமிசன் கடையிலிருக்கும் போது கடத்திச் சென்று தேனியில் ஒரு குடோனில் 3 நாள் அடைத்து வைத்து மிரட்டி, சித்திரவதை செய்து ரூ. 25,000-ஐ பறித்துக் கொண்டான். 4 வெற்று வெள்ளைப் பேப்பரில் ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்தும் வாங்கியுள்ளான். இது போல பலரிடமும் பணம் பறித்து கையெழுத்தும் வாங்கியுள்ளான்.



வனத்துறையினரால் சித்திரவதை செய்யப்பட்ட பிரபாகரன்

திருச்சி தொழுவலூர் பட்டியைச் சேர்ந்த 20 வயது பிரபாகரன் என்ற இளைஞர் இங்குள்ள தனது மாமா வேம்பன் என்பவரின் எஸ்டேட்டில் கணக்கெழுதுபவராக வேலை செய்கிறார். வனத்துறையினர் அடிக்கடி இங்கு வந்து தங்குவதையும் வன விலங்குகளை அவர்களே வேட்டையாடி இங்கு கொண்டு வந்து சமைத்துத் தரச் சொல்லி சாப்பிடுவதையும் சீமைச்சாராயம் குடிப்பதையும் விவரித்தார். 7.5.98 அன்று இதே போல வனத்துறையினர் வந்து சாப்பிட்டு குடித்துவிட்டு அங்கு வேலை செய்யும் பெண்களிடம் தவறாக நடக்க முயன்றுள்ளனர். பிரபாகரன் இதை தட்டிக் கேட்டு, இப்படி நடக்கிறமாதிரி என்றால் இங்கு வந்து தங்கக் கூடாது எனக்கூறி விட்டார். அதன் பிறகு அடிக்கடி வராமல் நின்றுவிட்டனர்.

14.10.98 அன்று காலை 9.30 மணிக்கு பாரஸ்ட் செல்வராஜ் கார்டுகள் பழனிச்சாமி, சுருளிவேல், ஜெய்வேல் வாட்சர்கள் ஜெயராமன், பாண்டியன், மற்றொரு பாண்டியன், மேலும் ஒருவர் என மொத்தம் எட்டு பேர் வந்து ரேஞ்சர் சந்திரன் கூட்டி வரச் சொன்னதாகக் கூறியுள்ளனர். எஸ்டேட் அலுவலகத்தில் யாருமில்லை, எல்லோரும் வேலைக்குச் சென்றுள்ளதால் வரமுடியாது என பிரபாகரன் மறுத்துள்ளார். வனத்துறையினர் எதிர்த்தா பேசுகிறாய் என்று மிரட்டி, காட்டுமிராண்டித்தனமாக அடித்து, மயக்க மடைந்த அவரை இழுத்துச் சென்றுவிட்டனர். இரவு 12.30 மணிக்கு ரேஞ்சர் சந்திரன் முன்பு நிறுத்தியுள்ளனர். அவனோ வனத்துறையினர் செய்வது எதையும் தடுக்கக் கூடாது என மிரட்டி, மீறினால் பொய் வழக்கு போடுவேன் எனக் கூறியிருக்கிறான். அப்போதே அந்த மிருகம், பிரபாகரனை மிரட்டி தனது ஓரினச் சேர்க்கை வெறிக்குப் பணிய வைத்துள்ளான்.

காலையில் எஸ்டேட் மாமா வந்து பிரபாகரனை மீட்டுச் சென்றுள்ளார். பிரபாகரன் மீது பொய் வழக்கும் போட்டு மிரட்டி இதற்கு பல ஆயிரம் ரூபாய் லஞ்சமாகவும் பறித்துக் கொண்டுள்ளான் ரேஞ்சர் சந்திரன்.

சந்தனக் கடத்தல் வீரப்பனை சமூக விரோதி என்கிற போது இந்த வனத்துறையினரை என்னவென்பது? மிருக வேட்டை, குடி, பாலியல் வன்முறை, மிரட்டிப் பணம் பறிப்பது, மலையையே பொன் விளையும் பூமியாக்கிய பழங்குடிகளையும், விவசாயிகளையும் காட்டுவாசிகளாகவே வைத்திருக்க, அரசின் எந்தவொரு வளர்ச்சித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த விடாமல் முடக்குவது என்று செயல்படும் இந்த வனத்துறை காட்டுமிராண்டிகள் இந்த சொர்க்க மலையை நரகமாக்கி வருகின்றனர்.

இம்மக்களின் அவலம் இப்போது முதல் முறையாக வெளி உலகிற்கு புரட்சிகர அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணியினரால் கொண்டு வரப்படுகிறது. இம்மக்கள் தங்களை மிருகத்தைவிடக் கேவலமாக நடத்தும் வனத்துறை கயவாளிகளின் கொட்டத்தை ஒடுக்கவும், தங்களது உரிமைகளைப் போராடிப் பெறவும் புரட்சிகர அமைப்புகளில் இணைவதுதான் காலத்தின் கட்டாயம்!

— மதன், இளம்பிறை
மற்றும்
பு.ஜ. செய்தியாளர்கள்
வி.வி.மு.,
போடி வட்டாரம்.

## கள்ளச் சாராயத்தை எதிர்த்தவர் படுகொலை கொலைகாரர்களுக்கு போலீசு உடந்தை

திருச்சி பாலக்கரை செங்குளம் காலனி பகுதியில் கள்ளச் சாராய விற்பனையை எதிர்த்த பாபு (எ) ரங்கநாதனை ராஜு என்பவனின் தலைமையிலுள்ள கள்ளச் சாராய ரௌடி கும்பல் 9.1.99 அன்று வெட்டிப் படுகொலை செய்தது.

இப்பகுதியில் 10 ஆண்டுகளாகவே மாமூல் வாங்கிக் கொண்டு கள்ளச்சாராயம் காய்ச்ச போலீசு அனுமதி அளித்து வந்தது. மாவட்ட ஆட்சியர், போலீசு உயரதிகாரிகள் எனப் பலரிடமும் பலமுறை பகுதி மக்கள் புகார் செய்தும் எவ்விதப் பயனுமில்லை.

ஏற்கனவே பாபு, ராஜு கோஷ்டியில் இருந்தவர்; பிறகு பிரிந்து விட்டார். பாபு



கள்ளச் சாராயத்தை எதிர்த்ததற்காகக் கொல்லப்பட்ட பாபு.

வசிக்கும் பகுதியில் ராஜு கள்ளச்சாராயம் விற்றதால் பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். எனவே, பாபு, ராஜுவிடம் சாராயம் விற்கக் கூடாது எனத் தடுத்துள்ளார்.

ராஜுவும், போலீசும் சேர்ந்து பாபுவைக் கொல்ல முடிவெடுத்தனர். இதனால் துணிவடைந்த ராஜு கும்பல் பாபுவைப் படுகொலை செய்தது. போலீசும் சாராய கோஷ்டி மோதலால் கொலை என வழக்குப் பதிந்து, ராஜுவைத் தேடி வருவதாக நடித்தது.

இதைப் புரிந்து கொண்ட செங்குளம் காலனி மக்கள் 500 பேர் திரண்டனர். கொலைகாரர்களைக் கைது செய்யக் கோரி சாலை மறியலில் குதித்தனர். கொலைகாரர்களைப் பாதுகாக்கும் போலீசு அதிகாரி திமிருடன் தடியடிக்கு உத்தரவிட்டார். ஆவேசமடைந்த மக்கள் ஒன்றுபட்டு எதிர்க்கவே, போலீசு பின்வாங்கி, பேச்சு வார்த்தைக்கு வந்தது. குற்றவாளிகளை கைது செய்வதாக உறுதியளித்தது.

கொலைகாரர்களைக் கைது செய்யும் வரை, மக்கள் போலீசை நிர்பந்தித்து முதல் கட்ட வெற்றி பெற்றனர். ஒன்றுபட்ட மக்கள் சக்தி வெல்லற்கரியது என்பதை இச்சிறு நிகழ்ச்சி உணர்த்துகிறது.

— பு.ஜ. முகவர், திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# முசுலீம் மதவெறியர்களின் காட்டு தர்பார்

**கேரளாவின் மலப்புரம், கோழிக்கோடு மாவட்டங்களிலும், மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்திலும் வாழும் முசுலீம் மக்கள் மீது, மதம் எனும் பெயரில், முசுலீம் மதவெறியர்கள் ஏவிவிடும் ஒடுக்குமுறைகள் எண்ணிலடங்காது!**

• ஃபா மரியம் அகமது 12 வயதுச் சிறுமி. பள்ளி ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கேற்று, மிகப்பல பரிசுகளைப் பெற்று முதன்மையாக வந்தார். அவரது சகோதரி 14 வயது ஒஃபீன் நடனம், நாடகங்களில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார். இவை இசுலாமிய சட்டத்திற்கு எதிரானவை என்று இவர்கள் 'மதரஸா'விலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

• 20 வயது கல்லூரி மாணவி தஸ்னி பானு என்பவர் அப்துல் நாசரை இசுலாமிய மரபுப்படியின்றி, சிறப்புத் திருமணச் சட்டப்படி மணம் புரிய விரும்பினார். இதற்காக பானு கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். பெற்ற தகப்பன் பானுவை வீட்டுக் காவலில் சிறை வைக்க, உறவினர்கள் சித்திரவதை செய்தனர்.

• வயது முதிர்ந்த சொஹாஜி பிபி என்பவர் மானபங்கப்படுத்தப்பட்டு, பொது மக்கள் சூழ்ந்திருக்க நிர்வாணமாக்கப்பட்டு மரத்தில் கட்டப்பட்டார். பயபீதியுற்ற அவரது மகளின் கண்ணெதிரே அந்த வயதான தாய் சவுக்கால் அடித்தே கொல்லப்பட்டார்.

இவை தாலிபான் கட்சி ஆளும் ஆப்கானிஸ்தானில் நடந்தவை என்று கருதினால் அது தவறு. ஆனால் இவை இந்தியாவில் நடந்தவை; நடந்து வருபவை.

முதலிரண்டு சம்பவங்கள் இந்த ஆண்டு கேரள மாநிலத்திலும், மூன்றாவது சம்பவம் மிக சமீபத்தில் மேற்கு வங்கத்திலும் நடந்தவைதான். நவீன திரிபுவாதிகளான 'மார்க்சிஸ்ட்' கட்சியினர் ஆளுகின்ற இம்மாநிலங்களில் நடக்கும் இத்தகைய அத்துமீறல்களை இவர்கள் அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை.

கேரளாவின் வடக்குப் பகுதியிலுள்ள மலப்புரம் மாவட்டமும், கோழிக்கோடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் முசுலீம்கள் மிகுந்துள்ள இடங்கள். பள்ளி மாணவிகள் சம்பவம் கோழிக்கோடு மாவட்டம் பய்யநக்கல் ஊரில் நடந்தது. அச்சிறுமிகளின் தந்தை அகமது கோயா தற்போது நீதி வேண்டி நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளார்.

மலப்புரத்திலுள்ள 'மன்செரி' கல்லூரியிலிருந்து தஸ்னி பானு நீக்கப்பட்டதற்குக் காரணமே, உள்ளூர் மஜித் கமிட்டியினர் மற்றும் இசுலாமிய மத அடிப்படைவாதிகளின் நிர்ப்பந்தமும்தான். இவர்கள் பானு மீது பாலியல் வன்முறையையும் ஏவலாம் எனப் பயந்து அப்துல் நாசர் 'ஹேபியஸ் கார்பஸ்' மனுச் செய்து, நீதிமன்றத்தின் மூலம் பானுவை மீட்டுள்ளார். இசுலாமிய மத அடிப்படைவாதிகள் இதை இப்படியே விட்டுவிடத் தயாராயில்லை.

இவை மட்டுமல்ல.

✦ மலப்புரம் நகரில் விபச்சாரிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு அனாதரவான பெண்கள் மொட்டையடிக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

✦ பிரபல சீர்திருத்தவாதியான செகனூர் மௌலவி, இசுலாமிய தீவிரவாதிகளால் சில ஆண்டுகளுக்கு முன் கடத்திச் செல்லப்பட்டார். அவரைக் கொன்று விட்டதாக மக்கள் நம்புகின்றனர். சி.பி.ஐ. இது பற்றி விசாரித்து வருகிறது.

✦ ரம்ஜான் மாதத்தில் இசுலாமியர் வாழும் பகுதிகளிலுள்ள இந்துக்களின் சிற்றுண்டி விடுதிகளை கட்டாயப்படுத்தி மூட வைத்த இசுலாமிய தீவிரவாதிகள், முஸ்லிம்களின் வீடுகளில் புகுந்து நோன்பு இருக்கிறார்களா? 'சுபா' தொழுதை செய்கிறார்களா? என அதிரடி சோதனைகள் செய்கின்றனர்.


ஒரு புறம் அரசு ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதிக்கிறது. மறுபுறம் இந்த இசுலாமிய அடிப்படை வாதிகளும் இசுலாமிய மதவெறியர்களும் மக்களின் அன்றாட நிகழ்வுகளிலும் மூக்கை நுழைத்து அவர்களின் அற்ப உரிமைகளையும் உயிரையும் பறிக்கிறார்கள். இசுலாமிய மக்கள் இவர்களால்தான் பயபீதியில் ஆழ்த்தப்பட்டுள்ளனர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்த கேரள பகுத்தறிவு சங்கத்தின் மலப்புரம் மாவட்டச் செயலாளர் எஸ். ஜப்பாரின் வீட்டை இசுலாமிய பயங்கரவாதிகள் கொடூரமாகத் தாக்கினர். இவர் குற்றம் சாட்டுவதைப் போல சி.பி.எம்., காங்கிரசுக் கட்சியினர் இந்த அத்துமீறல்களை, காட்டுமிராண்டித்தனத்தை ஒரு வார்த்தை கூட கண்டித்துப் பேசவில்லை.

இதற்கு முன் இயங்கி வந்த சில இசுலாமிய தீவிரவாத அமைப்புகள் முடங்கிப் போயின. ஆனால், இன்று தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் மிகவும் வெளிப்படையாக இயங்கி வரும் இசுலாமியத் தீவிரவாத அமைப்பின் அத்துமீறல்கள் வரையறையின்றிப் போகிறது.

சி.பி.எம். கட்சியின் மலப்புரம் மாவட்டச் செயலர்

**குடிகாரக் கணவனிடமிருந்து தலாக் (விவாகரத்து) பெற்றதற்காக, முசுலீம் மதவாத 'நீதி' மன்றத்தால் பழி வாங்கப்பட்ட ஹிராஹடன்.**





படிப்பகம்

www.padippakam.com

சைய தலிகுட்டி, இசுலாமியத் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவதாகக் கூறுகிறார். அதே மூச்சில் தஸ்னி பானு போன்றவர்களின் குடும்பப் பிரச்சினைகளில் தலையிடத் தயாராயில்லை என்கிறார். இதில்தான் இசுலாமிய தீவிரவாதிகளின் வெற்றியே உள்ளது. ஜனநாயக உரிமைகள் . மறுக்கப்படுகின்ற போது, அது சமூகப் பிரச்சினையாக மாறிவிடுகிறது. இப்போலி கம்யூனிஸ்டுகளோ ஓட்டுப் பொறுக்கும் நலனுக்காக சமூகப் பிரச்சினைகளை குடும்பப் பிரச்சினைகளாக முத்திரை குத்தி தலையிட மறுத்து, இசுலாமிய பயங்கரவாதிகளை ஊக்குவிக்கின்றனர்.

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளாவில் இந்நிலை என்றால் இவர்கள் ஆளும் மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் இதற்குச் சற்றும் குறைவின்றி இசுலாமிய அடிப்படைவாதிகள் இசுலாமிய மக்களைப் பயபீதியூட்டி வருகின்றனர். அவர்களது சொத்துக்களைப் பறித்து புதிய ஆதிக்கவாதிகள் உருவாகின்றனர். மேற்குவங்க மாநிலத்திலுள்ள முர்ஷிதாபாத், அன்டை நாடான வங்காள தேசத்தின் எல்லையை ஒட்டிய மாவட்டம்.



தமது கலைத்திறனை வெளிப்படுத்தியதற்காக, மதரஸாவில் இருந்து வெளியேற்றப்பட்ட சகோதரிகள் ஃபா மரியம் மற்றும் ஒஃபீன்.

இங்கு அரசின் சட்டமோ, மனித உரிமைகளோ மதிக்கப்படுவதில்லை. இசுலாமிய மத குருவான மௌல்வி, இப்பகுதியிலுள்ள உள்ளூர் ரவுடி, கடத்தல்காரர்களுடன் சேர்ந்து, ஒரு நீதிமன்ற விசாரணை நடத்துகின்றார். எது குற்றம், எது நீதி என இக்கும்பலே தீர்மானிக்கும். தண்டனை என்ற பெயரில் சொத்துக்களைப் பறித்து தமக்குள் பங்கிட்டுக் கொள்கின்றனர்.

வயதான சொஹாஜி பிபி அடித்துக் கொல்லப்பட்டது பற்றி இம்மாவட்டத்திலுள்ள சந்திபூர் கிராம மக்கள் வாயே திறக்க மறுக்கின்றனர். அந்த அளவு அவர்கள் இந்த கிரிமினல் - மதவாத கும்பலால் மிரட்டப்பட்டு பயபீதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்த ஒரு சம்பவம் மட்டுமல்ல.

✱ முர்ஷிதாபாத் மாவட்டம், கபஸ்தங்கா கிராமத்திலுள்ள 19 வயதுப் பெண் ஹிராஹடன். இவரது எதிர்ப்பையும் மீறி ஒரு குடிகாரனுக்கு மணம் முடித்து வைத்தனர் இவரது பெற்றோர். குடிகாரனின் சித்திரவதைக் கொடூரம் தாங்காமல், நான்கே நாட்களில் இசுலாமியச் சட்டப்படி 'தலாக்' சொல்லிப் பிரிந்து வந்து விட்டார் ஹிராஹடன். இது நடந்தது கடந்த ஆண்டு ஜூலையில். இதன் பின் ஹிராஹடன் குடும்பத்தினரின் துன்பம் பன்மடங்கு அதிகரித்தது.

சி.பி.எம். கட்சியின் , இரு பஞ்சாயத்து உறுப்பினர்கள் அடங்கிய 'நீதி'பதிகள் கொண்ட குழு, இக்'குற்றத்தை' விசாரித்தது. ஹிராஹடனின் 60 வயது தகப்பனார் சம்சுதின் இந்நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு இரவு பகல் பாராமல், உணவு, நீர் தராமல், மாறி மாறி 20 மணி நேரம் விசாரணை என்ற பெயரால் துளைத்தெடுக்கப்பட்டார். இறுதியில் ரூ. 60,000 அபராதம் விதிக்கப்பட்டு அவரது 1.5 பிகாஸ் நிலமும் பறிக்கப்பட்டது. ரூ. 15,601/=ஐ, சம்சுதின் அங்கேயே கட்டிவிட்டார்.

விசாரணை என்ற பெயரில் நடக்கும் கொடுமை பற்றி போலீசில் திரும்பத் திரும்ப புகார் செய்தும், 'நீதி' விசாரணையில் குறுக்கிட போலீசு மறுத்துவிட்டது. இக்கொடுமை இன்னும் அளவு மீறிப் போயிருக்கலாம். ஆனால் இதைக் கேள்விப்பட்ட 'கோஷ்' என்பவர் தலையிட்ட பின்பே போலீசு வழக்குப் பதிந்து, 3 'நீதிபதி'களைக் கைது செய்தது. அவர்கள் மறுநாள் காலை பிணையில் வெளிவந்ததற்கு முக்கிய காரணம் உள்ளூர் சி.பி.எம். தலைவர்கள்தான். 'விசாரணை'யைக் கண்டித்த சம்சுதினின் உறவினர் அல்டாஃப் ஷேக் என்பவர் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

✱ சந்திபூர் கிராமத்தைச் சேர்ந்த அனுரா பிபி என்பவர் அவரது வீட்டிலிருந்து விரட்டப்பட்டார். இவர் தனது கணவனை ''தலாக்'' சொல்லிப் பிரிந்ததை வைத்து ஆத்திரமுற்றிருந்த மத அடிப்படைவாத கும்பல், அவர் செய்த ஒரு சிறு தவறை ஊதிப் பெருக்கி, பொது மக்கள் மத்தியில் அவரைக் கடுமையாகத் தாக்கி, செருப்பு மாலை போட்டு, ஊர்வலமாக இழுத்து வந்து விரட்டியடித்தனர்.

✱ பெர்ஹாம்பூர் மாவட்டம் பலிதெளரா கிராமத்தைச் சேர்ந்த ராய் பகதூர் செளத்ரி என்பவர் ஒரு நிலப் பிரச்சினையில், இதே போன்ற 'நீதி' மன்ற விசாரணைக்குப் பின் கொல்லப்பட்டார்.

உள்ளூர் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சந்தனுராய் கூறுவது போல - ''இது அபாயகரமானது. மதக் கலவரம் ஏதுமின்றி மிக நீண்ட காலம் அமைதியாகயிருந்தது முர்ஷிதாபாத். நிலைமை இப்படியே போனால் ஆர்.எஸ்.எஸ்.-ம், பாரதீய ஜனதாவும் எல்லைப்புறப் பகுதிகளில் பலமடைந்தால், அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.''

'மார்க்சிஸ்ட்' கட்சியினர் மதவெறிக்கு எதிராகப் போராடி வருவதாகக் கூறுகினறனர். உண்மையில் கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். மதவெறி கும்பலுடனான மோதலில் உயிரிழப்புகளும் [illegible] இந்து, முஸ்லிம் [illegible] களின் அத்துமீறல்களைப் பற்றி, இவர்கள் ஓட்டுப் பொறுக்குவதற்கு வசதியாக கண்டு கொள்வதில்லை. இதனாலேயே இந்து, முஸ்லிம் அடிப்படைவாதிகள் பலமடைவதும், இந்து - முஸ்லிம் மதவெறி கும்பல்களுக்கு ஆதரவு பெருகுவதும் என்று நிலைமை கைமீறிச் செல்ல ஆரம்பிக்கின்றன. ஓட்டுப் பொறுக்குவதற்கான இத்தகைய விட்டுக் கொடுத்தல்கள் மதவெறியர்களுக்கே வலுவூட்டும். இந்து, முஸ்லிம், கிறித்தவம் என்ற எந்த மத அடிப்படைவாதமாகட்டும், அந்தந்த மதத்தவர்களின் ஜனநாயக உரிமைகளுக்கெதிராகச் செயல்படத் தொடங்கும் போது, அந்நடவடிக்கைகள் முறியடிக்கப்பட வேண்டும். ஆனால் தேர்தல் ஆதாயம் கருதி ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் இதைச் செய்யப் போவதில்லை என்பதே உண்மை.

✱ முத்து



படிப்பகம்

www.padippakam.com

# திருமானூர் அம்பேத்கர் சிலை அவமதிப்பு:

# த.மா.கா.வினரின் சாதி வெறியாட்டம் துணை போகும் தமிழக போலீசு.

பெரம்பலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்திலுள்ள கீழசனை, அழகிய மணவாளம், எரக்குடி, காமரசவல்லி உள்ளிட்ட பல கிராமங்களில் அரியலூர் தொகுதி த.மா.கா., எம்.எல்.ஏ.வும் மூப்பனார் சாதியைச் சேர்ந்தவருமான பாளை. அமரமூர்த்தியின் தூண்டுதலால் நடந்து வரும் சாதி ஆதிக்கத்தின் தொடர்ச்சியாகவே கடந்த 11.01.99 அதிகாலை 3 மணி வாக்கில் திருமானூர் அம்பேத்கர் சிலைக்கு செருப்புமாலை போட்டு, நரகலை வீசி அவமரியாதை செய்துள்ளனர். திருமானூர் ஊராட்சி மன்றத் தலைவர் தனபால் தூண்டுதலின் பேரில், மூப்பனார் பேரவைத் தலைவர் விஜயகுமார், ரஜினி சங்கர் ஆகியோர் உள்ளிட்ட 16 பேர் கொண்ட ஆதிக்க சாதிவெறிக் கும்பலே இந்த அவமரியாதையைச் செய்த சமூக விரோதிகள். போலீசு இவர்களை விட்டுவிட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதே பொய் வழக்குப் போட்டு ஒடுக்குகிறது.

**எரக்குடி** கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவர் சைக்கிளில் சென்றதற்காக ஆதிக்க சாதிவெறியர்கள் அவரைத் தாக்கி சைக்கிளையும் பறித்துக் கொண்டனர். இனி பறையன்களுக்கு கடைகளில் சாமான் தரக் கூடாது எனக் கட்டுபாடும் போட்டனர். இந்த சாதி வெறியர்களைப் பாதுகாத்தவன் பாளை அமரமூர்த்தி. மக்கள் சாலை மறியல் செய்த பின்பே குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

**அழகியமணவாளம்** கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் பிணம் தூக்கிச் சென்றதற்காக மூப்பனார் சாதி வெறியர்கள் தாக்கியது மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட ஒருவரின் 2 ஏக்கர் நிலத்தில் பயிரிட்ட நெல்லையும் அறுவடை செய்து கொண்டனர். இதற்கும் பாளை. அமரமூர்த்தியின் ஆதரவுண்டு.

இதே போல **கீழசனை** கிராமத்தில் தொகுப்பு வீடுகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மேல்சாதி உடையார்களுக்கும் இடையே ந[illegible]ந்த பிரச்சினையிலும் பாளை அமரமூர்த்தி சம்பந்தமுண்டு.

**காமரசவல்லி** எனும் கிராமத்தில் கடந்த தீபாவளி அன்று மூப்பனார் சாதியினர் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இங்கும் ஆதிக்க சாதி வெறியர்களுக்கு ஆதரவாக தாழ்த்தப்பட்டவர்களை பாளை அமரமூர்த்தி மிரட்டினார்.

**திருமானூரில்** பேருந்து நிலையத்தில் அம்பேத்கார் சிலை அருகே தாழ்த்தப்பட்ட இளைஞர் புனிதன் என்பவர் பெட்டிக் கடை நடத்தி வருகிறார். இக்கடையில் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் கூடுவதும் பெஞ்சில் அமர்வதும் ஆதிக்க சாதி வெறியர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக காந்திபுரம் பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள், ஊராட்சித் தலைவராக வெற்றி பெற்ற மூப்பனார் சாதியைச் சேர்ந்த தனபாலுக்கு ஓட்டுப் போடவில்லை, இந்த ஆத்திரத்தில் தனபால் புனிதனின் பெட்டிக்கடையை எடுக்கச் சொன்னார். அவர் முடியாது என மறுக்கவே, மூப்பனார் பேரவைத் தலைவர் விஜயகுமார், ரஜினி சங்கர், ரவி அடங்கிய கும்பலைத் தூண்டிவிட்டார் தனபால்.

10 பேர் கொண்ட அந்த சாதிவெறிக் கும்பல் 31.12.98 இரவு பெட்டிக் கடையை அடித்து நொறுக்கியது. இக்கொடுஞ் செயலை எதிர்த்த செல்வம், அவரது தம்பி பாலமுருகன் இருவரையும் அரிவாளாலும் தடிகளாலும் தாக்கியது. போலீசு இதுபற்றி நடவடிக்கை எடுக்காததால் காந்திபுரம் தாழ்த்தப்பட்ட மக்கள் சாலை மறியல் செய்தனர். அதன் பின்பே ஒப்புக்கு 4 பேர் கைது செய்யப்பட்டனர். எம்.எல்.ஏ. அமரமூர்த்தி, இதில் தலையிட்டு சாதி வெறியர்கள் மேலும் கைதாகாமல் தடுத்தார். மறியலின் போது பெண்கள் உறுதியாக நின்று போராடினர். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மூக்கையா பாண்டியன் என்ற அ.தி.மு.க. பிரமுகரும் முன்னின்றார்.

இதற்கு 10 நாள் கழித்துதான் அம்பேத்கர் சிலை அவமரியாதை நடந்தது. இதற்குக் காரணமான தனபால், விஜயகுமார், ரஜினி சங்கர் உட்பட 22 பேர் மீது புகார் கொடுத்தும் போலீசு நடவடிக்கை எடுக்காததால், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது கூட வன்முறையில் இறங்காமல் அமைதி காத்தனர்.

அதன் பிறகு பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் செண்பகராமன் பேச்சுவார்த்தை நடத்தி, இரவிற்குள் குற்றவாளிகளைக் கைது செய்வதாக உறுதி கூறவே, சாலை மறியல் கைவிடப்பட்டது. அன்று எம்.எல்.ஏ. பாளை அமரமூர்த்தி வந்தார். போலீசுடன் சதியாலோசனை செய்தார். அ.தி.மு.க. பிரமுகர் மூக்கையா பாண்டியன் தூண்டுதலில் தாழ்த்தப்பட்டவர்களே இதைச் செய்தனர் என பொய் சாட்சியுடன் 'குற்றவாளிகளை' புதிதாக உருவாக்கி, பிரச்சினையையே திசை திருப்பிவிட்டார்.

13.1.99 அதிகாலை தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் காந்திபுரத்திற்குள் நுழைந்த போலீசு, மூக்கையா பாண்டியன், அய்யனார், செல்வம் உட்பட 16 ஆண்கள் 12 பெண்களை கைது செய்தனர். கொலை முயற்சி உட்பட பல்வேறு வழக்குகள் பதிந்து மேலும் 40 பேரைத் தேடி வருகின்றனர், இவர்கள் தான் சிலையை அவமதித்தவர்கள் எனக் கூசாமல் புளுகுகின்றனர்.

இந்த அமரமூர்த்தி கள்ளச் சாராயம் விற்றுவந்த ஒரு சமூக விரோதி. ஏற்கனவே திருமானூரில் சாராயப் பிரச்சினையில் கும்பல் அடிதடி செய்து, கொலையும் நடந்ததற்கு இவனே காரணமாயிருந்துள்ளான். இன்று த.மா.கா. எம்.எல்.ஏ.வாக, சாதி வெறி கும்பல் தலைவனாக உள்ளான்.

11-ந் தேதியன்று இரவு சிலை அவமரியாதை செய்ததைப் பார்த்ததாகக் கூறும் பொய் சாட்சி, எம்.எல்.ஏ. அமரமூர்த்தி வந்த பின்புதான் சாட்சி கூற வருகிறார். பேருந்து நிலைய கடை உடைப்பு உட்பட தாழ்த்தப்பட்டவர்கள் மீதான மூப்பனார் ஆதிக்க சாதி வெறியர்களின் ஒடுக்குமுறையின் தொடர்ச்சியே சிலை அவமரியாதை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. ஆனால் தண்டனையோ தாழ்த்தப்பட்டவர்கள் மீதுதான்.

அமரமூர்த்தி, அவரது கைத்தடிகளின் மீது மட்டுமல்ல, இச்சாதி வெறியர்களுக்குத் துணை போன காவல் துறை கண்காணிப்பாளர் செண்பகராமன், மாவட்ட ஆட்சியர் கோசலைராமன் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுப்பதென்பதே சரியானதாயிருக்கும்.

— ம.க.இ.க., தஞ்சை.

திருமானூர் அம்பேத்கர் சிலை அவமரியாதையைக் கண்டித்து கடலூர் மாவட்டம் பண்ருட்டி நகரப் பேருந்து நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் சுவரொட்டி ஒட்டினர். இதனை ஒட்டி பண்ருட்டி காவல்துறை உதவி ஆய்வாளர், சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த பாபு என்பவரைக் கைது செய்து, ஆபாசமாக, கொச்சையாகத் திட்டி, இழிவுபடுத்தி, சித்திரவதை செய்து, காரணமேயின்றி காவலில் வைக்க கடலூர் நீதிமன்றம் கொண்டு சென்றார். நீதிபதி இதை மறுக்கவே, திரும்ப பாபுவை சித்திரவதை செய்து, பஸ்சுக்கு தீ வைக்கச் சதி செய்தேன் என எழுதி வாங்கி சிறையிலடைத்துள்ளார். ஒட்டுமொத்தமாக அரசே தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகவே செயல்படுகிறது என்பதை நடந்துள்ள சம்பவங்கள் உறுதிப் படுத்துகின்றன.

— பு.ஜ. வாசகர் வட்டம், பண்ருட்டி.



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா வழியில் கேரள முதல்வர் நாயனார் நடத்திய 'புரட்சி' திருமணம்

இந்தியப் பொதுவுடைமை (மார்க்சிஸ்ட்) கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் தோழர்களே,

கேரளத்தைப் பார்! மே. வங்கத்தைப் பார்! என்று உங்களது 'இடதுசாரி' அரசின் சாதனைகளை நீண்ட காலமாக நீங்கள் பிரச்சாரம் செய்து வருகிறீர்கள். இதோ, இந்தப் படத்தைப் பாருங்கள். கேரளத்தின் 'மார்க்சிஸ்ட்' முதல்வர் நாயனார் தனது இளைய மகன் வினோத்குமாருக்கு கடந்த டிசம்பர் மாத இறுதியில் நடத்திய ஆடம்பரத் திருமணக் காட்சி இது. மணப் பெண்ணின் கழுத்திலும் காதிலும் கைகளிலும் மின்னுவதெல்லாம் அசல் தங்க நகைகள்! மாநில முதல்வராயிற்றே! ஆடம்பரத் திருமணம், கிலோ கணக்கில் தங்க - வைர நகைகள், அறுசுவை விருந்து, தடபுடலான வரவேற்பு என்று அசத்திவிட்டார் நாயனார். தமிழகத்தையே மொட்டையடித்து பாசிச ஜெயா தனது வளர்ப்பு மகனுக்கு ஆடம்பரத் திருமணம் செய்தார் என்றால், சொந்த மகனுக்கு அதில் பாதியாவது செய்யாவிட்டால் முதல்வர் பதவிக்கே இழுக்காகிவிடும் என்று நாயனார் கருதினாரோ?

கம்யூனிஸ்டுகள் எளிமைக்கு இலக்கணமானவர்கள்; சாதி - மத - சடங்கு - சம்பிரதாயங்களை வெறுத்து ஒதுக்குபவர்கள்; கம்யூனிஸ்டு இல்லத் திருமணங்கள் எளிமையாகவும், மக்களை புரட்சிக்கு அறைகூவும் மேடையாகவும் அமைய வேண்டும் என்றல்லவா உங்கள் தலைவர்கள் மேடைகளில் முழங்கினார்கள்? அந்த வழியில் உங்கள் கட்சியிலுள்ள எத்தனையோ தோழர்கள் புரட்சிகர - சீர்திருத்தத் திருமணங்களை முன்னுதாரணமாக நடத்தி இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டினார்களே! சிதம்பரத்தில் போலீசு மிருகங்களின் தாக்குதலுக்கு கணவனைப் பறிகொடுத்து, பாலியல் வன்முறைக்கும் ஆளான பத்மினியை, உங்களது இளைஞர் அமைப்பைச் சேர்ந்த தோழர் ஒருவர் மறுமணம் புரிந்தாரே! அவையெல்லாம் இன்று காலாவதியாகி விட்டதா? அல்லது அரசாங்கப் பதவியிலிருப்பவர்கள் இப்படி ஆடம்பரத் திருமணம் செய்யலாம் என்று உங்கள் கட்சியில் புதிய விதி உருவாக்கப்பட்டுள்ளதா?

புரட்சிகரமான முறையில், தாலி - சடங்குகள் இன்றித் திருமணம் செய்யாதது மட்டுமல்ல; மணப் பெண்ணுக்கு சீர்வரிசை என்ற முறையில் இப்படி கிலோ கணக்கில் நகைகளைப் பூட்டி திருமணம் செய்வது உங்களுக்கு அருவெறுப்பாக இல்லையா? அதை இப்படி புகைப்படம் எடுத்தும் ''வீடியோ'' படமெடுத்தும் விளம்பரப்படுத்திக் கொள்வது வெட்கமாக இல்லையா? நவீன முறையில் தனது மகனுக்கு நாயனார் இப்படி வரதட்சணை வாங்குவதை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா? அல்லது பெண்களை அழகுப் பதுமைகளாக்குவதைத்தான் ஏற்கிறீர்களா?

அரசியல் வேறு, சொந்த வாழ்க்கை - குடும்பம் வேறு; நான் நாத்திகவாதி, ஆனால் என் மனைவி கோயிலுக்குச் செல்வதும், சடங்குகள் செய்வதும் அவர்களுடைய ஜனநாயக உரிமை. அதில் நான் குறுக்கிடுவது சர்வாதிகாரச் செயலாகும் என்று நியாயவாதம் பேசுவது இன்றைய ஓட்டுக் கட்சி அரசியல் பண்பாடாகி விட்டது.

அந்த வழியில், நான் கம்யூனிஸ்டு, எளிமையான, புரட்சிகரமான திருமணங்களைத்தான் விரும்புகிறேன். ஆனால் பெண் வீட்டார் மணப்பெண்ணுக்கு நகைகளை அணிவித்தால், அதை நான் எப்படி தடுக்க முடியும்? என்று நாயனார் வாதிடுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் போகிறீர்களா?

நாயனார் தனது மகனுக்கு ஆடம்பரத் திருமணம் நடத்தியதைக் கண்டு உங்கள் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்தார்களாம்; சிலர் கண்டனம் கூடத் தெரிவித்தார்களாம்! அப்புறம் என்ன ஆனது? அவ்வளவுதான்! இதர ஓட்டுக் கட்சிகளில் நடப்பதைப் போலவே இந்த விவகாரம் மூடி மறைக்கப்பட்டு விட்டது. ஏனெனில் இந்த விவகாரத்தை கட்சியில் வைத்துப் போராட, உங்கள் கட்சியிலுள்ள எந்தத் தலைவருக்கும் அருகதையில்லை. எல்லோருமே சொத்து - சுகம் - ஆடம்பரம் என்று சீரழிந்த பண்பாட்டில் மூழ்கித் திளைக்கும் போது, அதில் ஒருபடி முன்னேறி ஆடம்பரத் திருமணம் நடத்தும் நாயனாரை விமர்சிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ அவர்கள் முன் வருவார்களா? நாயனாரின் மூத்த முதலாளித்துவ மகன் கிருஷ்ணகுமாரின் வர்த்தக நிறுவனத்தைக் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தவர்கள் 'இடதுசாரி' அமைச்சர்கள் தானே!

இது புதிய விவகாரம் அல்ல; மே.வங்க முதல்வர் ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு முதலாளியாக இருப்பதையும், மே.வங்கத் தொழிலமைச்சர் சோமநாத் சட்டர்ஜி தனது பேரனுக்கு பூணூல் அணிவிக்கும் விழா நடத்தியதையும் விமர்சிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ முன்வராத உங்கள் தலைவர்கள், நாயனார் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று இன்னுமா நம்புகிறீர்கள்?

திரிபுராவின் முன்னாள் முதல்வரும் மூத்த 'மார்க்சிஸ்ட்' தலைவருமான நிருபன் சக்ரவர்த்தி, கட்சியில் ஊழலும் சீரழிவும் பெருகிவிட்டது என்று ஜோதிபாசு உள்ளிட்ட பல தலைவர்கள் மீது பகிரங்கமாக குற்றம் சாட்டிய போது, என்ன நடந்தது? நிருபன் சக்ரவர்த்தி மனநிலை சரியில்லாதவர் என்று உங்கள் தலைவர்கள் அவதூறு செய்து அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றி தங்களது சீரழிவை மூடி மறைத்துக் கொண்டார்களே! இதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்றே நம்புகிறோம்.

இனியும் இந்த அவமானங்களுடன் சமரசம் செய்து கொண்டு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் சீரழிவில் சங்கமமாகப் போகிறீர்களா? அல்லது இத்தகைய துரோகத்தனங்களுக்கு எதிராகக் கலகம் செய்து, இப்போலி கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி, நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் இணைந்து, மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிப் பாதுகாக்கும் மகத்தான கடமைக்குத் தோள்கொடுக்கப் போகிறீர்களா?

• குமரன்

கழுத்து கொள்ளாத அளவு நகை அணிந்திருக்கும் மருமகளுடன் நாயனார்: இதுதான் பாட்டாளி வர்க்கப் பண்பாடா?



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா




சென்னையில் நடந்த இந்திய அறிவியல் பேராயத்தின் 86-ஆவது மாநாடு தான் இந்தப் படம். இந்த அறிவியல் மாநாட்டைத் துவக்கி வைத்த பிரதமர் வாஜ்பாயி, ''அறிவியல் தொழில்நுட்ப உதவிகளைப் பெறும் நாடாகவே தொடர்ந்து இருக்காமல், அதனை வழங்கும் முக்கிய நாடுகளுள் ஒன்றாக இந்தியா திகழ நாம் உறுதி கொள்ள வேண்டும்'' எனப் பேசி விட்டுப் போனார். யாரும் எதிர்க்க முடியாத, மறுக்க முடியாத விசயம் தான் இது. ஆனாலும், அறிவியல் வளர்ச்சி அடைந்த நாடு என்பது, உற்பத்தியைப் பெருக்குவதற்காக புதிய, புதிய தொழில்நுட்பங்களைக் கண்டு பிடிப்பது மட்டுந்தானா?

தொலைக்காட்சிப் பெட்டி அறிவியல் சாதனம் தான். ஆனால், தொலைக் காட்சியை மூட நம்பிக்கையை வளர்ப்பதற்கல்லவா வாஜ்பாயி அரசு பயன்படுத்துகிறது. இதோ, ''சக்திமான்'' என்ற தொலைக்காட்சி தொடரின் நாயகனிடம் கை கொடுப்பதற்கு படித்த கூட்டமொன்று முண்டியடித்துக் கொண்டு நிற்கிறதே, இதை என்னவென்பது? தொலைக் காட்சியில் இராமாயணம் தொடராக வந்தபொழுது, இந்திய நாட்டுச் சிறுவர்கள் வில்லும் கையுமாகத் திரிந்தார்களாம்; இப்பொழுதோ, நிழல் சக்திமான், நிஜமாக வந்து தங்களைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் பல சிறுவர்கள் தீ வைத்துக் கொள்கிறார்கள். இந்தியா அறிவியலில் முன்னேற வேண்டும் என விரும்பும் பிரதமர் வாஜ்பாயி, பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களைக் கொண்ட ''சக்திமான்'' தொடரை, பல சிறுவர்கள் இறந்த பின்னும் ஏன் தடை செய்ய மறுக்கிறார்? ''சூப்பர் மேன்'' என்ற அமெரிக்க முட்டாள்தனத்தை, ஏன் ''சக்திமானாக்கி'' ஒளிபரப்புகிறார்?



புதிய புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வந்து தொழிலாளர்களை வேலையில் இருந்து விரட்டியடிக்கவும், அணுகுண்டுகளைத் தயாரிக்கவும், மக்களிடம் இருக்கும் மூட நம்பிக்கைகளைப் பலப்படுத்த ''சக்திமானை'' ஒளிபரப்பவும் வாஜ்பாயிக்கு அறிவியல் வேண்டும்.

நமக்கும் அறிவியல் வேண்டும். புதிய, புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு வேட்டு வைப்பதற்காக அல்ல. அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக; அதோடு, ''எது உண்மை? எது பொய்?; எது மூடத்தனம்? எது பகுத்தறிவு? மக்களின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்'' என்று பகுத்தறியும் அறிவை வளர்த்துக் கொள்வதற்காக!

மேடைக்கு அறிவியலையும், ஓட்டுக்கு இராமனையும், கிருஷ்ணனையும், சக்திமான்களையும், திரைப்பட நடிகர்களையும் தூக்கிக் கொண்டு வரும் ஓட்டுக் கட்சிகள், இந்திய மக்களிடம் பகுத்தறிவை வளர்ப்பார்கள் என இனியும் நம்பத்தான் வேண்டுமா?